# இயேசு அழைக்கிறார்

YESU AZHAIKIRAR - TAMIL MONTHLY - MARCH 2026
VOL. 23 ISSUE 12 - 28 PAGES - Rs. 21/-

மார்ச் 2026



**வீடுகளைக் கட்டி,**
**அவைகளில் குடியிருப்பார்கள்,**
**திராட்சத் தோட்டங்களை நாட்டி,**
**அவைகளின் கனியைப் புசிப்பார்கள்.**
(ஏசாயா 65:21)





# மாணவர்
## பிரார்த்தனை 2026









Dr. பால் தினகரன் ஜெபத்தின் மூலம் மாநிலத்தில் மூன்றாமிடம்





இயேசு அழைக்கிறார் மாணவர் பிரார்த்தனை, 2026 பிப்ரவரி 1, ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு சென்னை, செயின்ட் ஜார்ஜ் பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. பல்வேறு பள்ளிகளிலிருந்து நான்காயிரம் மாணவ மாணவியர் இதில் கலந்துகொண்டனர். தேர்வுகளுக்கு ஆயத்தமாகும் மாணவர்கள் வெறுமனே அல்லாமல் திட நம்பிக்கையுடன் ஆயத்தமாவதற்காக இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது.

ஸ்டெல்லா ரமோலா, டேனியல் டேவிட்சன் ஆகியோரின் துடிப்பான ஆராதனை வேளை, மனதிற்கு விசுவாசத்தை, ஆவிக்குரிய ஆயத்தத்தை அளித்தது. காருண்யா பல்கலைக்கழக மாணவர்கள் வழங்கிய குறுநாடகம், நேரத்தை, குறித்த நோக்கத்துடன், ஞானமாக பயன்படுத்துவதை ஊக்குவித்தது.

கலந்துரையாடல் சாட்சி வேளையில், சாமுவேல் தினகரன் மாணவ மாணவியரை தங்கள் அனுபவத்தை பகிர்ந்துகொள்ளும்படி அழைத்தார். உண்மையான வெற்றி, கிறிஸ்துவின் மூலமே வருகிறது என்பதை அது காட்டியது. 11ம் வகுப்பு மாணவி, இவாஞ்சலின் பகிர்ந்துகொண்ட சாட்சி மிகவும் ஊக்கப்படுத்துவதாக இருந்தது. 10ம் வகுப்புப் பொதுத்தேர்வு எழுத இருந்தபோது, பயம் அவர்களை மிகவும் பாரப்படுத்தியது. 2025 ஜனவரி 15ம் தேதி அடையாறில் நடந்த பங்காளர் கூட்டத்தில் அவர்கள் கலந்துகொண்டார்கள். Dr. பால் தினகரன் ஜெபித்தபோது, தேவன் மனக்கலக்கத்தை மாற்றி சமாதானத்தை அருளினார். இவாஞ்சலினுக்கு 497/500 மதிப்பெண்கள் கிடைத்தன. அந்த மதிப்பெண்கள், பள்ளியிலும் மாவட்டத்திலும் முதல் இடமும், மாநிலத்தில் மூன்றாமிடமுமாகும். பாடங்களில் முழு மதிப்பெண்கள் பெற்று அரசு கல்வியுதவி கிடைத்தது.

Dr. பால் தினகரன், மாணவர்களின் கல்வி பயணத்தில் தேவ பிரசன்னம் விளங்கும் என்று கூறி, ‘தரித்து நில்லுங்கள்; தேவன் உங்களுக்காக யுத்தம் செய்வார்’ என்று வல்லமையான செய்தியளித்தார். தேவ ஞானத்தையும் வல்லமையும் முற்றிலும் நம்பினால், அவர்கள் ஆயத்தப்படும் தேர்வுகளை சந்திக்க தேவையான தெய்வீக வழிகாட்டுதல் கிடைக்கும் என்று உறுதியாகக் கூறினார்.

இயேசு அழைக்கிறார் ஊழியம் 2026ம் ஆண்டில் 63 ஆண்டுகளை நிறைவு செய்வதை முன்னிட்டு வெளியிடப்பட்ட ஆண்டு மலர், உண்மையாக செய்யப்படும் சேவையையும் அது ஏற்படுத்தும் நன்மையான மாற்றத்தையும் ஏற்படுத்தியது.







மாணவ மாணவியரை தேவ வல்லமை நிரப்பும்படியும், அவர்கள் சுகத்தை பெற்றுக்கொள்ளும்படியும், தங்கள் குடும்பத்தில் ஆசீர்வாதத்தை அனுபவிக்கும்படியும் சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன் மனதுருக்கத்துடன் பிரார்த்தனை செய்தார்கள்.

கூட்டத்தின் நிறைவில் Dr. பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர் ஒவ்வொரு மாணவ மாணவியருக்கும் தனி ஜெபம் செய்தனர். மாணவ மாணவியர் ஊக்கம் பெற்றவர்களாய், ஆவிக்குரிய பெலனடைந்தவர்களாய், தாங்கள் ஆயத்தப்படும் தேர்வுகளில் கிறிஸ்துவின் மூலம் ஜெயம் பெறுவோம் என்ற நிச்சயத்தோடு திரும்பினர்.





# பெதஸ்தா
## சிறப்பு ஆசீர்வாத கூட்டம்







2026 பிப்ரவரி 8ம் தேதி (ஞாயிறு) பிற்பகல் 2 மணிக்கு பெதஸ்தாவில் சிறப்பு ஆசீர்வாத கூட்டம் நடைபெற்றது. இந்தியா முழுவதிலுமிருந்து 5,000க்கும் அதிகமானோர் எதிர்பார்ப்புடன் தேவனுடைய வல்லமையான சமுகத்தில் கூடி வந்தார்கள். ஆராதனையினாலும் ஜெபத்தினாலும் விசுவாசம் புதுப்பிக்கப்பட்டது.


சாமுவேல் தினகரன், சங்கீதம் 18:2 என்ற வசனத்தின் அடிப்படையில், கர்த்தரே கன்மலையாகவும், அரணான கோட்டையுமாக தம் மக்களை அன்பினால் சூழ்ந்துகொண்டு இரட்சிப்பை தருகிறார் என்று செய்தியளித்தார். அவர் கூடியிருந்த மக்களோடு கலந்துரையாடி, இதற்கு முன்பு நடந்த கூட்டங்களில் நடந்த சாட்சிகளை அறிமுகப்படுத்தி, தேவன் உண்மையுள்ளவர் என்று அனுபவித்ததை பகிர்ந்துகொள்ளும்படி செய்தார்.


Dr. பால் தினகரன், மீகா 2:13ம் வசனத்திலிருந்து வல்லமையான தேவ செய்தியளித்தார். கர்த்தர் தம் ஜனங்களுக்கு முன்பு போய், சிலுவையின் ஜெயத்தினால் கட்டுகளை தகர்க்கிறார்; சங்கிலிகளை அறுக்கிறார்; வியாதிப்பட்டோரை சுகமாக்குகிறார்; தடைகளை அகற்றுகிறார்; வாழ்க்கையை சீர்ப்படுத்துகிறார் என்று கூறினார். அவர் ஜெபித்தபோது, பலர் சுகம், விடுதலை, சீர்ப்படுத்துதலை பெற்றுக்கொண்டு சாட்சியின் மூலம் அதை உறுதிப்படுத்தினர்.


சோமனூரை சேர்ந்த கமலா என்ற சகோதரி, இருதயத்தில் பிரச்னையோடும், பக்கவாதத்தாலும் பாதிக்கப்பட்டிருந்தார்கள். பக்கவாதம் அவர்கள் இடது கையை பாதித்திருந்தது. மிகுந்த வேதனையோடு அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். ஜெபம் ஏறெடுக்கப்பட்டபோது, தேவன் அவர்களை வல்லமையாக தொட்டு, பூரணமாக சுகப்படுத்தினார்; அவர்களது வேதனை அகன்றது; பூரண ஆரோக்கியம் பெற்றார்கள்.


எழுந்த சாட்சிகளின் மூலம் தேவனுடைய வல்லமையான நாமம் உயர்த்தப்பட்டது. பிறகு பரிசுத்த ஆவியானவரின் புதிய அபிஷேகம் ஊற்றப்படவேண்டும் என்று சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன் ஜெபித்தார்கள். மனதுருக்கத்துடன் ஏறெடுக்கப்பட்ட தனி ஜெபங்களின் மூலம் தேவ நாமம் மகிமைப்பட்டது.

காலையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் ஏறக்குறைய ஆயிரம் பேர் கூடி வந்திருந்தனர். அதில் சாமுவேல் தினகரன், யோவான் 4:24 வசனத்தின் அடிப்படையில், ஆவியோடும் சத்தியத்தோடும் உண்மையாக தொழுதுகொள்ளும்படி தேவன் அழைப்பு விடுப்பதையும், தேவ வார்த்தையில் வேரூன்றி, விசுவாசிகள் நீதியுள்ள வாழ்க்கை நடத்துவதற்கு கர்த்தருக்குப் பயப்படும் பயமும், பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டுதலும் உதவும் என்றும் விவரித்தார். அந்த ஆராதனையில் பங்குபெற்றோர் திடநம்பிக்கையாலும் சந்தோஷத்தாலும் சமாதானத்தாலும் நிரம்பினர்.











# தேவன் உங்களுக்கு நியாயம் செய்வாரா?

அன்பானவர்களே, இம்மாதத்திற்கான தேவனுடைய வாக்குத்தத்தம்: **"கர்த்தர் நீதிசெய்கிற தேவன்; அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்" (ஏசாயா 30:18).** இந்த நிச்சயம், இம்மாதத்தில் உங்கள் இருதயத்தை திடப்படுத்துவதாக.

நம் தேவன், நீதியின் தேவனாயிருக்கிறார். தம் ஜனங்களின் கூப்பிடுதலை ஒருபோதும் கேளாதிருக்கிறவரல்லர். அவர் நீதியுள்ள நியாயாதிபதி. ஆண்டவருக்காக நாம் காத்திருக்கும்போது அவர் நமக்காக கிரியை செய்கிறார். அவர் நம் வாழ்வில், நம் குடும்பத்தில், நம் சமுதாயத்தில், நாம் இருக்கும் எல்லா சூழ்நிலைகளிலும் நீதியை நடப்பிக்கிறார். ஆகவே, பயப்படாதிருங்கள். தேவன் உங்களை விசாரிப்பார்; களிகூரப்பண்ணுவார்; ஏற்ற வேளையில் உங்கள் வாழ்வில் கனமுண்டாகப் பண்ணுவார். அவர் உங்களுக்கு நீதி செய்யும்போது, உங்களைச் சுற்றிலுமிருப்பவர்கள், நீங்கள் எவ்வளவு நீதியானவர்; கள்ளம் கபடமற்றவர், தேவனுடைய பலனுக்கு தகுதியானவர் என்பதைக் கண்டுகொள்வார்கள். தேவன் தமது நீதியினால் தாங்கிய மக்களைக் குறித்து நாம் பார்க்கலாம்.

### தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு நீதி செய்கிறார்

முதலாவது, தேவன் தம் பரிசுத்தவான்களுக்கு நீதி செய்கிறார். **"கர்த்தர் நியாயத்தை விரும்புகிறவர்; அவர் தமது பரிசுத்தவான்களைக் கைவிடுவதில்லை; அவர்கள் என்றைக்கும் காக்கப்படுவார்கள்" (சங்கீதம் 37:28)** என்று வேதம் கூறுகிறது. அவருடைய சித்தத்தில் நடக்கிறவர்கள் ஒருபோதும் கைவிடப்படுவதில்லை. தேவனுடைய பரிசுத்தவானாகிய நீங்கள், பிரித்தெடுக்கப்பட்டவர்கள், அவரால் நேசிக்கப்பட்டவர்கள், அவரது பிரசன்னத்தால் சுமக்கப்படுகிறவர்கள். நீங்கள் அவருக்குச் சொந்தமானவராக இருக்கிறபடியால் அவரது நீதி உங்களைச் சூழ்ந்துகொள்ளும்.

தேவனுடைய பரிசுத்தவான்களின் ஜீவனை அவரது நீதி எப்படி காக்கிறது என்பதை வேதம், **"கர்த்தர் மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற**



Dr. பால் தினகரன் - paul@jesuscalls.org



Pauldhinakaranofficial

**மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத் தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனிகொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான்**'' **(எரேமியா 17:7,8)** என்று அருமையாக விவரிக்கிறது. தேவன், தமது பரிசுத்தவான்களை இப்படியே நிலைப்படுத்துகிறார். பஞ்சம், நிச்சயமின்மை, உலகளாவிய நெருக்கடி, பொய்யான குற்றச்சாட்டுகளின் காலங்களிலும் தம் ஜனங்கள் ஒன்றிலும் குறைவுபடாமலும், அநியாயமான சூழல்களால் கட்டப்படாமலும் இருக்கும்படி அவர் செய்கிறார். அவரது நீதி அவர்களை பயத்திலிருந்து காத்து, வாழ்க்கை முழுவதும் தாங்குகிறது.

இதை உண்மையென நிரூபிக்கும் ஒரு சாட்சி: அநேக ஆண்டுகளாக, இயேசு அழைக்கிறார் ஊழியத்தில் ஜெப வீராங்கனையாக சேவை புரியும் சிலாக்கியம் எனக்குக் கிடைத்தது. மற்றவர்களுக்காக திறப்பில் நின்று ஜெபித்தபோது, மற்றவர்களுக்கு நடந்ததைப்போல என் குடும்பத்திலும் தேவனுடைய பலத்த கரம் செயல்பட்டதை கண்டேன். என் மகன் அதிகமாக சுகவீனமுற்றது என் வாழ்வில் நிகழ்ந்த இருளான காலங்களாக இருந்தது. ஆறு மாத காலமாக, அவனால் நிற்கவோ, நடக்கவோ முடியாமல் படுத்த படுக்கையாயிருந்தான். மருத்துவ அறிக்கைகள் நம்பிக்கையளிக்காத நிலையில், பயம் எங்களை பிடித்துக்கொண்டது. ஆனாலும், ஒரு ஜெப வீராங்கனையாக நான் தேவனுடைய வார்த்தையைப் பற்றிக்கொண்டு, இரவும் பகலும் என் இருதயத்தை இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில் ஆண்டவரிடம் ஊற்றினேன். உடன் ஜெப வீரர்களுடன் உபவாசித்து ஜெபித்து, வேத வாக்குத்தத்தத்தின்படி, தேவனுடைய தழும்புகளால் என் மகன் சுகமானான் என்று அறிக்கையிட்டோம் (ஏசாயா 53:5). ஒருநாளில், தேவன் இயற்கைக்கு அப்பாற்பட்டதை செய்தார். என் மகனின் கால்கள் திடீரென பலனை திரும்பப் பெற்றன. அவன் நின்றான்; நடக்கத் தொடங்கினான்; விரைவிலேயே தன் வேலையை தானே செய்ய தொடங்கினான். இன்று நல்ல ஆரோக்கியத்துடன், தேவ மகிமைக்கு சாட்சியாக வாழ்கிறான். தேவனுடைய சீர்ப்படுத்தல் அங்கே முடிந்துவிடவில்லை. பதினைந்து ஆண்டுகளாக, எனக்கும் என் மருமகளுக்கும் இடையே பெரிய கருத்துவேறுபாடு நிலவியது. மிகவும் வேதனையாக இருந்தது. மௌனமும், தவறான புரிதலும், கசப்பும் அந்தப் பிரிவு இனி மாறாது என்ற அளவுக்கு குடும்பத்தின் சமாதானத்தின் சந்தோஷத்தையும் குலைத்துக்கொண்டிருந்தது. தேவன் ஏற்றவேளையில் மருமகளின் இருதயம் உருகச் செய்தார். ஒருநாள் மாலை வேளையில், அவள் கண்ணீரோடு என்னிடம் வந்து, மன்னிப்பு கேட்டு ஒப்புரவானாள். சத்துரு பிரிவினையை கொண்டு வர நினைத்தாலும் தேவன் அன்பின் ஒற்றுமையின் சாட்சியாக அதை மாற்றினார். இப்போது நாங்கள் ஒன்றாய் மகிழ்ந்து, ஜெபித்து, ஆண்டவருக்கு சேவையையும் செய்து ஆசீர்வாதமான குடும்பமாக வாழ்கிறோம். - திருமதி. ஜோசப், இலங்கை.




நீங்களும் தேவனுக்குச் செவிகொடுத்து, எல்லாவற்றிலும் அவருடைய சித்தத்தை தேடுகிற பரிசுத்தவானாக இருக்கிறீர்களா? அப்படியானால், உபத்திரவ காலத்தில் உங்களைக் காத்து, பெரிய சவால்களின் மத்தியில் உங்களைச் செழிக்கப்பண்ணுவதாக அவர் வாக்குக் கொடுக்கிறார். இம்மாதம், இயேசுவின் நாமத்தில் தேவ நீதி உங்களுக்குக் கிடைக்கும்.

இதை இயேசுவின் வாழ்க்கையில் பார்க்கிறோம்; எல்லாவற்றையும் சிருஷ்டித்த கர்த்தர், சிலுவை பரியந்தம் அநியாயமான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்டார். அவரை காப்பாற்ற யாருமில்லை. தம்மை காட்டிக்கொடுத்தவனின் கால்களையும் அவர் கழுவினார்; அப்பத்தையும் திராட்சரசத்தையும் அவனுடன் பகிர்ந்துகொண்டார்; ஆனாலும், நித்திய நோக்கம் நிறைவேறுவதை அவை தடுக்கவில்லை. இயேசுவை விடுவிக்கும் அதிகாரம் பெற்றிருந்த பிலாத்து, தன் கைகளைக் கழுவி, ஜனங்களின் விருப்பத்தை நிறைவேற்றினான். உலகத்தில் அநியாயம் மேற்கொள்வதுபோல தோன்றினாலும், மனுக்குலத்தின்மீது தேவனுடைய நித்திய நியாயம் வரும்படி அது அனுமதிக்கப்பட்டது (ஏசாயா 9:7). அவ்வாறே உங்கள் வாழ்விலும் அநியாயமான சூழ்நிலைகள் காணப்படலாம். ஆனால், தேவன் நியாயத்தைக் கொண்டுவரும்போது, அது நிலைத்திருக்கும். அவர் கபடற்றவர்களை பாடுகளிலிருந்து விடுவிக்கிறவர் மட்டுமல்ல; ஏற்றவேளையில் அவர்களுக்கு பலனும் அளிக்கிறவர்.

### நீதிமானுக்கு செய்யப்படும் நியாயம்

இரண்டாவதாக, மற்றவர்கள் முன்பு தம் ஊழியக்காரரின் நீதிக்கு தேவன் நியாயம் செய்கிறார். வேதம், ''**விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்; கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும்**'' **(ஏசாயா 58:8)** என்று வாக்குக்கொடுக்கிறது. தேவன், தம் சித்தத்தில் உண்மையாய் நடக்கிறவர்களை கனம்பண்ணுகிறார்.

யோனாவின் வாழ்க்கை தேவ நீதியின் இன்னொரு பரிமாணமான அவரது மனதுருக்கத்தைக் காட்டுகிறது. முதலில் நினிவே மனந்திரும்பிவிட்டால் தேவன் பட்டணத்தை அழிக்காமல் தப்பவிடுவார்; அப்போது

அழிவைக் குறித்த தன் செய்தி வீணாகிப்போகும் என்று பயந்து, யோனா தேவனுக்குக் கீழ்ப்படியாமல் ஓடிப் போனான். ஆனால், தேவன் பின்தொடர்ந்தார். ஒரு பெருங்காற்று எழும்பியது. யோனா கடலுக்குள் வீசப் பட்டான். ஆனாலும் தேவன் தம் நியாயத்தின்படியும் இரக்கத்தின்படியும் அவனை காப்பாற்றுவதற்கு ஒரு பெரிய மீனை ஆயத்தம்பண்ணியிருந்தார். யோனா மனந்திரும்பினான்; நினிவேக்கு கொண்டு வரப்பட்டான்; தேவனுடைய செய்தியை அறிவித்தான். ஜனங்கள் தங்கள் பாவங்களைவிட்டு திரும்பியதும் தேவன் அவர்களை மன்னித்து, தான் மனதுருக்கமுள்ள தேவன் என்பதை நிரூபித்தார். தேவனுடைய நியாயம் யோனா விடம் செயல்பட்டது. யோனாவும் நினிவே மக்களும் தேவனுடைய மனதுருக்கம், மக்கள் தங்கள் தவறான வழிகளை விட்டு திரும்பி, நீதியை செய்தால் நியாயமாய் விளங்கும் என்பதற்கு உதாரணங்களாவர். நம் தேவன் இப்போதும் அப்படிப்பட்டவராகவே இருக்கிறார். நாம் அவரோடு ஒப்புரவாக தேடும்போது அவர் தம் கிருபையை விளங்கப்பண்ணுவார்.

இந்த சத்தியத்தை எங்கள் வாழ்க்கையில் நாங்கள் அனுபவித்து அறிந்தோம். 1985ம் ஆண்டு ஜுலை மாதம் எங்கள் குடும்பம் மிகுந்த உபத்திரவத்தை சந்தித்தது. பல்கலைக்கழகம் ஒன்றை கட்டுமாறு தேவன் என் தந்தைக்கு கட்டளைக் கொடுத்தார். இந்தத் தரிச னத்தை அறிவித்தவுடனே என் தந்தையின் சிறுநீரகங் கள் செயலற்றுப்போயின. குறுகிய காலத்திற்குள் கொடிய விபத்தில் என் குடும்பம், என் தங்கையை இழக்கக் கொடுத்தது. எங்களைச் சூழ்ந்த கேள்விகள், விமர்சனங் களால் நாங்கள் மனமுடைந்தோம். ஆனாலும், 1986 ஜுலை 29ம் தேதி, குடும்பமாய் தேவனுக்கு முன்பாக வந்து, ''ஆண்டவரே, எங்கள் சித்தமல்ல; உம் சித்தமே நிறைவேறட்டும்'' என்று ஜெபித்தோம். உடைக்கப்பட்டு துயரத்தில் இருந்தாலும் நாங்கள் அவருக்கு கீழ்ப்படிய முடிவெடுத்தோம். பரிசுத்த ஆவியானவரால் எங்கள் உள்ளங்கள் பெலப்படுத்தப்பட்டன; தேவனுடைய அழைப்பை நிறைவேற்றும்படி நாங்கள் எழும்பினோம். அவரது வல்லமையால் காருண்யா பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டது. இன்று 700 ஏக்கர் பரப்பில் உலக அளவிலும் சாட்சியாக பிரகாசிக்கிறது.

தேவன் நம் நீதியை பட்டப்பகலைப்போலாக்கி, நம்மை விசாரித்து தம் சித்தத்தை நிறைவேற்றுவார். ''**உன் நீதியை வெளிச்சத்தைப்போலவும், உன் நியா யத்தைப் பட்டப்பகலைப்போலவும் விளங்கப்பண்ணுவார்**'' (சங்கீதம் 37:6).

அன்பானவர்களே, ஆண்டவரை நம்புங்கள். பாதை வேதனையாக, தெளிவற்றதாக இருந்தாலும், முழு உள்ளத்தோடும் அவருக்குக் கீழ்ப்படியுங்கள். நீதியின் தேவன் உங்களைத் தாங்குவார்; கனப்படுத்துவார்; தம் சித்தத்தை உங்கள் வாழ்க்கையில் நிறைவேற்றுவார்.

கர்த்தர், ''**நான் அவர்களுடன் நின்று, நீதி செய்து, என் சித்தத்தை நிறைவேற்றுவேன்**'' என்று கூறுகிறார். அவரது நீதி ஒருபோதும் தவறாது. தேவன் உங்களோடு நிற்கும்போது, ஒருவனும் உங்களுக்கு எதிராய் நிற்க முடியாது. ஒன்றும் உங்களை மேற்கொள்ளாது. ''**உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க் காதேபோம்**'' **(ஏசாயா 54:17).** தேவன், உங்கள் நீதியை மற்றவர்களுக்கு முன்பாக பட்டப்பகலைப்போல பிரகாசிக் கும்படி செய்து, தமது நாமத்தை மகிமைப்படுத்துவார். ஆகவே, பயப்படாதிருங்கள். எழுந்திருந்து தேவ சித்தத்தை செய்து, தைரியத்தோடும் கீழ்ப்படிதலோடும் அவரது நீதியை நிறைவேற்றுங்கள்.

ஆண்டவர் ஒருமுறை எங்கள் குடும்பத்தோடு பேசி, ''எந்த அளவு அதிகமாக மக்கள் பொய்யாய் உங்களை நிந்தித்து, பொறாமையால் சாபமிடுகிறார்களோ, அந்த அளவு நான் உங்களை ஆசீர்வதிப்பேன்'' என்று கூறி னார். ஆகவேதான், நாங்கள் குற்றச்சாட்டுகளுக்கும் அறியாமைகளுக்கும் பதில் சொல்லாதிருக்க தீர்மானித் தோம். தேவனுடைய சித்தத்தையே தொடர்ந்து செய்கி றோம். இந்தக் கீழ்ப்படிதலினால் இயேசு அழைக்கிறார், காருண்யா, சீஷாவின் மூலமாக கோடிக்கணக்கானோர் வாழ்க்கையை தேவன் தொட்டுள்ளார். உங்களுக்கும் அப்படியே செய்வார். நீங்கள் தேவனுக்குக் கீழ்ப்படியும் போது, அவரது நீதி உங்களுக்கு முன்னாகச் சென்று, உங்களைப் பாதுகாத்து உயர்த்தும். பெரிதான, வல்லமையான காரியங்கள் நிச்சயம் நடக்கும்.




## தேவனை நோக்கிக் கூப்பிடுகிறவர்களுக்கு நியாயம்

மூன்றாவதாக, இயேசுவின் நாமத்தில் தொடர்ந்து கூப்பிடுகிறவர்களுக்கு தேவன் நியாயம் செய்கிறார். இயேசுதாமே, ''**தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட வர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத் திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று உங்க ளுக்குச் சொல்லுகிறேன். ஆகிலும் மனுஷகுமாரன் வரும் போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ**'' **(லூக்கா 18:7,8)** என்று உறுதியாக கூறுகிறார். அவருடைய பதில்கள் எப்போதும் தாமதிக்காது. நியாயம் வரும். எந்த அளவு அதிகமாக எதிர்ப்பை நீங்கள் சந்திக்கிறீர்களோ, அந்த அளவுக்கு தேவன் உங்களை கனம்பண்ணி, மகா உயரங்களுக்கு எழும்பப்பண்ணுவார்.

தொழுதுகொள்கிறவர்களுக்கு, உபவாசிக்கிறவர்

களுக்கு, தம் பாதத்தில் காத்திருக்கிறவர்களுக்கு தீர்க்க தரிசன பார்வையை அருளுவதன் மூலமாய் தேவன் நியாயம் செய்கிறார். வேதத்தில், அன்னாளைக் குறித்து வாசிக்கிறோம். எண்பத்துநாலு வயது விதவையான அவள், தேவாலயத்தைவிட்டு ஒருபோதும் நீங்காமல் இரவும் பகலும் உபவாசித்து ஜெபித்துக்கொண்டிருந்தாள் (லூக்கா 2:37,38). அவள் வாழ்க்கை, தேவனுக்கு அர்ப் பணிக்கப்பட்ட இருதயத்தோடு, ஆராதனையால் நிறைந்த தாக இருந்தது. இயேசு தேவாலயத்திற்குக் கொண்டு வரப் பட்டபோது, இவரே உலக மீட்பர் என்று தீர்க்கதரிசனம் உரைக்கும்வண்ணம் தேவன் அவள் சிந்தையை திறந்தார்.

புறஜாதிகளை சந்திக்கும்படி தேவனால் அழைக்கப் பட்ட பவுல், தன் ஊழியத்தை ஆரம்பிப்பதற்காக, இயேசு வின் சீஷர்களிடம் அவரைப் பற்றி கற்றுக்கொள்ள விரும்பாமல், ஆண்டவரால் போதிக்கப்பட்டபடியே அரபி தேசத்திற்குச் சென்றான் (கலாத்தியர் 1:17). அவன் உபவாசித்து ஜெபித்தான். அதன் பலனாக, பக்திக்குரிய வாழ்க்கை வாழ்ந்து புறஜாதிகளையும் யூதர்களையும் கிறிஸ்துவின் அண்டை வழிநடத்தும்படி, பிரகாசிக்கிற வெளிச்சமாக நம்மை விளங்கப்பண்ணுகிற, இன்னும் மறைபொருளாக இருக்கிற வெளிப்பாடுகளை பவுல் பெற்றுக்கொண்டான்.

ஜெபம், நியாயத்தை அளிக்கும் என்பதை தென் காசியைச் சேர்ந்த பாரதி நாகர் என்ற சகோதரி, தன் வாழ்வில் கண்டார்கள். தென்காசியிலுள்ள அரசு தகவல் தொழில்நுட்ப அலுவலகத்தில் என் இளைய மருமகன் பால் ராஜ், தற்காலிக ஊழியராக பத்து ஆண்டுகள் பணியாற்றினார். திடீரென, புதிதாக ஒருவர் நியமிக்கப் பட்டதும் அவர் வேலையிழந்தார். இந்த விஷயம் தொடர்பாக மூன்று ஆண்டுகள் நாங்கள் நீதிமன்றத்தில் வழக்கு நடத்தினோம். இயேசு அழைக்கிறார் ஊழியத்தில் பங்காளரான நாங்கள் இந்த இக்கட்டான சூழ்நிலையில், தேவன் ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவார் என்று விசுவாசித்து, உபவாசித்து ஜெபித்தோம். ஆண்டவரின் பெரிதான கிருபையாலும், இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் ஜெப உதவியாலும் இப்போது அவருக்கு வேலையும், உரிய இழப்பீடும் வழங்கப்பட்டுள்ளது. எங்கள் ஜெபங்களுக்குச் செவிகொடுத்து அவற்றுக்குப் பதில் அளித்ததற்காக தேவனை ஸ்தோத்திரிக்கிறோம்.

இதே கிருபை உங்களுக்கும் கிடைக்கிறது. ஆராதனை உங்கள் வாழ்க்கை முறையானால், நீங்கள் வேலை செய்தாலும், பயணித்தாலும், விரோதத்தை எதிர்கொண் டாலும் தமது சித்தத்தை அறியும்படி தேவன் உங்கள் இருதயத்தை திறக்கிறார். தேவனிடத்தில் அன்புகூருகிற வர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாகவே நடக்கிறது என்று வேதம் கூறுகிறது (ரோமர் 8:28). உபத்திரவத்திலும் தேவன் தமது ஆவியினால் தீர்க்கதரிசன குரலாக, தெளிவையும், வழிகாட்டுதலையும், அதிகாரத்தையும் அளித்து உயர்த்துவார்.

### நீதிக்கு நியாயஞ்செய்கிறார்

நிறைவாக, தேவன், நீதியாய் வாழ்கிறவர்களுக்கு நியாயஞ்செய்கிறார். "**பலியிடுவதைப்பார்க்கிலும், நீதியும் நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம்**" என்று வேதம் கூறுகிறது (நீதிமொழிகள் 21:3). நீதியாக வாழ்க்கை நடத்துவதை, சமயரீதியான சடங்காச்சாரங்களைக் காட்டி லும் உயர்வாய் தேவன் நினைக்கிறார். நம் கிரியை களும் வார்த்தைகளும் நடத்தைகளும் அநியாயமான வையாய் இருந்தால், நம் வாழ்வில் அநியாயத்தை நாம் வரவேற்போம்.

"**நன்மைசெய்யப் படியுங்கள்; நியாயத்தைத் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து, திக்கற்றப்பிள்ளையின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும் விசாரியுங்கள்**" (ஏசாயா 1:17) என்று வேதம் நம்மை எச்சரிக்கிறது. நாம் கூலியை பிடித்து வைத்திருந்தால், ஏழைகளைக் கொள்ளையிட்டால், நேர்மையற்று நடந்தால், அநியாயத் தின் வாயிலாக லாபமீட்டினால், ஒடுக்கப்பட்டவர்களின் முறையிடுதல் தேவனின் செவிகளை எட்டும் (யாக்கோபு 5:4). நாம் வெளியரங்கமாக எவ்வளவு பக்தியுள்ளவர் களாகக் காட்டிக்கொண்டாலும், அப்படிப்பட்ட ஜெபங்கள், நம் ஆசீர்வாதங்களுக்குத் தடையாக இருக்கின்றன (ஏசாயா 1:15). நாம் நீதியாய் வாழாவிட்டால், அநியாயம் நம்மை பிடிக்கும். அநியாயத்தால் கைகள் கறைபட்டிருக் கும்போது செய்யப்படும் ஜெபங்களுக்கு தேவன் செவி கொடுக்கமாட்டார்.




ஆனால் நாம் நீதியாய் வாழ்ந்து, மற்றவர்களைக் கனம்பண்ணி, கொடுக்கவேண்டியவற்றை கொடுத்து, நலிவுற்றோர்பேரில் கரிசனை காட்டினால் தேவ நீதி வல்லமையாய் நம்மேல் வரும். தலைமுறை தலை முறையாய் அவருடைய பாதுகாப்பு விளங்கும். உங்கள் வாழ்க்கையை கனம் நிரப்பும். தேவன் உங்களை உயர்த்துவார்.

தொற்காளின் வாழ்க்கையில் தேவனுடைய ஆசீர்வா தத்தை நாம் பார்க்கிறோம். அவள் நற்கிரியையும் தருமங்களையும் செய்தாள் (அப்போஸ்தலர் 9:36-42). அவளது அன்பினால் அனைவரும் அவளை அறிந்திருந் தனர். குறிப்பாக, தன் பகுதியில் வசித்த விதவைகளுக் கும் ஏழைகளுக்கும் அவள் அங்கிகளையும் வஸ்திரங் களையும் தைத்துக்கொடுத்தாள். அவள் வியாதிப்பட்டு மரித்தாள். அவளது சரீரத்தை மேல்வீட்டிலே வைத்திருந் தார்கள். அப்போஸ்தலனாகிய பேதுரு, அருகிலுள்ள லித்தா பட்டணத்தில் இருப்பதை அறிந்து, அவனிடத்தில் விசுவாசிகளை அனுப்பி தாமதிக்காமல் வரும்படி




கேட்டுக்கொண்டார்கள். அவன் வந்தபோது, விதவைகள் தொற்காள் உண்டுபண்ணின ஆடைகளை பேதுருவுக்குக் காண்பித்தனர். பேதுரு எல்லோரையும் வெளியே அனுப்பிவிட்டு, முழங்காற்படியிட்டு, ''தபீத்தாளே, எழுந்திரு'' என்று ஜெபித்தாள். அவள் கண்களைத் திறந்து பார்த்து, எழுந்து உட்கார்ந்தாள். இந்த அற்புதம் யோப்பா பட்டணம் முழுவதும் பரவி, அநேகரை ஆண்டவரிடம் நடத்தியது.

ஆம், நற்கிரியைகளின் மூலம் வெளிச்சம் வீசும்படி வாழ்வதற்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். ''**மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது**''. நீதியுள்ள வாழ்க்கை மறைந்திருக்கக்கூடாது. இது தேவனுடைய சுபாவத்தை பிரதிபலித்து அவருடைய நாமத்துக்கு மகிமையைக் கொண்டுவரும்.

என் தந்தை மறைந்த பிறகு, தேவன் என்னிடம் பேசி, ஏழைகளைப் பராமரிக்கவேண்டும் என்று கூறினார் (ஏசாயா 1:17). ஆடையில்லாமல் இருப்போருக்கு ஆடைகளைக் கொடுக்கவும், உணவில்லாமல் இருப்போருக்கு உணவு அளிக்கவும், வீடு இல்லாதோருக்கு தங்க இடம் அளிக்கவும் கூறினார். அப்போது எங்கள் வெளிச்சம் விடியற்கால வெளுப்பைப்போல இருக்கும் என்றும், எங்கள் சுகவாழ்வு திரும்பவும் துளிர்க்கும் என்றும், எங்கள் நீதி எங்களுக்கு முன்செல்லும் என்று வாக்குக் கொடுத்தார் (ஏசாயா 58:8). தேவன் இந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார். நாங்கள் சீஷாவின் மூலம் ஏழைகளுக்கு சேவை செய்ய ஆரம்பித்தபிறகு, தேவன் இரக்கமாய் ஊழியத்தை காத்து தாங்கினார். பல போராட்டங்களின் மத்தியிலும் அவரது நீதி தொடர்ந்து வெளிப்பட்டது.

மக்கள், ஏழைகளுக்கு சேர வேண்டியதில் கடினமாய் பேரம் பேசுவதையும், மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும்படி செய்த தியாகத்தை விமர்சிப்பதையும் பார்க்கிறோம். இப்படிப்பட்ட செயல்கள் அவர்கள்மேல் அநீதியை வரப்பண்ணும். மாறாக, நாம் நியாயமாய் நடந்து, மற்றவர்கள்பேரில் கரிசனை காட்டி, அவர்களுக்கு கொடுக்கப்படவேண்டியதை கொடுத்து அவர்களை கௌரவப்படுத்தினால், தேவனுடைய நியாயம், வல்லமையாய் நம் வாழ்வில் புரண்டோடும். ''**தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்**'' **(1 யோவான் 4:20)** என்று வேதம் கூறுகிறது. ஜனங்கள்மேல் அன்பு காட்டுவதன் மூலம் தேவனை நேசிப்பதைக் காட்ட முடியும்.

ஒரு தேசத்தின் பிரதமர் ஒருவர், அவருடன் பேசும்படி ஒருமுறை என்னை அழைத்தார். தலைமைபொறுப்பில் தான் நுழைவதால் வழிகாட்டுதலை கேட்டார். நான் அவரிடம், ''அதிகாரத்தை அனுபவிப்பதற்காக மட்டும் நீங்கள் அங்கே அமர்த்தப்படவில்லை. முழு தேசத்திற்கும் தந்தையாக இருக்கும்படி கடவுள் உங்களை வைத்திருக்கிறார்'' என்றேன். சமயம், ஜாதி, மொழி அல்லது பின்னணி சார்ந்து எந்த ஒரு தரப்பினருக்கும் பட்சமாயிருப்பது தலைமைத்துவம் அல்ல என்று விளக்கினேன்.

ஆம், ஒரு தலைவர் எல்லா மக்களையும் சமமாக நேசிக்கவேண்டும். ஒரு தரப்பினரை அலட்சியம் பண்ணினால்கூட, தலைமைத்துவத்தின் அஸ்திபாரம் நொறுங்க தொடங்கிவிடும். இதே சத்தியம் நம் அனைவருக்கும் பொருந்தும். நம் குடும்பம், பணியிடம், ஆலயம், சமுதாயம் எங்கும் பாரபட்சமில்லாமல் அனைவரையும் நேசிக்கவும், கரிசனை காட்டவும் வேண்டும். நாம் உண்மையாய் மக்களை நேசிக்கும்போது, தேவனையே நாம் நேசிக்கிறோம். அவர் அந்த அன்பைக் கண்டு நம் வாழ்க்கையை ஸ்திரப்படுத்துகிறார்; நம் நிலையைப் பெலப்படுத்துகிறார்; நாம் செய்கிற எல்லாவற்றையும் வாய்க்கப்பண்ணுகிறார்.

இம்மாதத்தில் நமக்குத் தேவன் எளிமையான, ஆழமான செய்தியை கொடுக்கிறார். நீதியாக வாழுங்கள்; பூரணமாக அன்பு காட்டுங்கள்; நியாயமாக நடந்திடுங்கள். நீங்கள் அப்படிச் செய்யும்போது, தேவன் உங்களுக்கு நியாயஞ்செய்வார். உங்கள் ஜெபங்களுக்குப் பதில் கிடைக்கும். உங்கள் வேலை செழிக்கும். நீங்கள் அநேகருக்கு ஆசீர்வாதமாக விளங்குவீர்கள்; உங்கள் வாழ்வில் தேவ தயவு தங்கியிருக்கும். தேவனுடைய நீதி உங்களைப் பின்தொடரட்டும்; உங்களை நிலைப்படுத்தட்டும்; இன்றும் என்றும் உங்களை ஒளிவீசப்பண்ணட்டும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**ஜெபம்:**

அன்புள்ள ஆண்டவர் இயேசுவே, நீர் நீதியின் தேவன். நீர் உம்மையே தாழ்த்தி, உம் நீதியின் இரத்தத்தைச் சிந்தினீர்; என் மீட்புக்கான பூரணமான பலியானீர். நீதியாக வாழ்வதற்கான கிருபையை எனக்கு அருளிச் செய்யும். தேவனுடைய நியாயத்தின் மூலம் நீர் வெற்றியாய் எழுந்ததுபோல, நான் எதிர்கொள்ளும் எல்லா சூழ்நிலையையின் மேலாகவும் எழும்ப எனக்குப் பெலன் தாரும். என்னை உறுதியாக நிலைப்படுத்தும். எனக்கு விரோதமாக உருவாக்கப்படும் ஆயுதம் எதுவும் வாய்க்காதேபோகட்டும். உம் நியாயம் என் மூலம் கிரியை செய்யட்டும்; இவ்வுலகிற்கு நான் உம்மை காட்டும்படி செய்யும். உமக்கே சகல மகிமையையும் செலுத்தி, உம்முடைய வல்லமையான நாமத்தில் ஜெபிக்கிறேன், ஆமென்.

## பூரண ஆசீர்வாதம்

2019ம் ஆண்டு எனக்குத் திருமணம் நடைபெற்றது. நானும் என் கணவரும் குடும்ப வாழ்வை உடனே தொடங்கினோம். ஆனாலும், எத்தனையோ முயற்சிகளுக்குப் பிறகும் நான் கருத்தரிக்கவில்லை. மருத்துவ ஆலோசனையின்போது, சினைப்பை நீர்க்கட்டி (PCOD) இருக்கிறதென்று மருத்துவர்கள் கண்டுபிடித்தனர். செயற்கை கருத்தரிப்பு (IVF) மட்டுமே ஒரே வழி என்று கூறினர். குறிப்பாக, என் கணவர் இராணுவத்தில் பணிபுரிவதால் நாங்கள் ஏழு அல்லது எட்டு மாதங்களுக்கு ஒருமுறை மட்டுமே சந்திக்க முடியும். இந்த இக்கட்டான காலகட்டத்தில், ராஞ்சியில் உள்ள ஜெப கோபுரத்துக்கு வந்து, குடும்ப ஆசீர்வாத திட்டத்தில் இணைந்து, என் பாரத்தை ஆண்டவரிடம் அர்ப்பணித்தேன். தேவன் கிருபையாயிரங்கி எங்கள் ஜெபத்தைக் கேட்டு, ஏப்ரல் 20ம் தேதி அழகிய பெண் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்தார். தேவனுக்கு எங்கள் உள்ளம் நன்றியால் நிறைந்திருந்தது.

– பூனம் டிரிக்கி, ராஞ்சி.

**பூனம் டிரிக்கியைப் போல, குடும்பங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்போது, காத்திருக்கும் காலத்தை தேவன் கொண்டாட்டத்தின் காலமாக மாற்றுவார்.**



# குடும்ப ஆசீர்வாத திட்டம்

வேதாகமத்தில், ஒரு குழந்தைக்காக ஏங்கியபடியால் அன்னாள் மிகுந்த வேதனையில் கர்த்தருக்கு முன்பாக அழுதாள். ஆண்டுகள் கடந்தபோது, அவள் இருதயம் மௌனமான வேதனையால், பதில் இல்லாத விண்ணப்பங்களால் பாரப்பட்டிருந்தது. ஆனாலும், அவள் தன் குடும்பத்தை தேவனுக்கு ஊழியஞ்செய்ய அர்ப்பணித்தபோது, கர்த்தர் அவளை நினைத்தார்; அவள் துக்கத்தை சந்தோஷமாக மாற்றினார்; சாமுவேலை கொடுத்து அவளை ஆசீர்வதித்தார். அப்படியே தேவன், தம்மை நோக்கி நம்பிக்கையோடு ஜெபித்து, தேவ பணியில் தங்களை இணைத்துக்கொண்ட குடும்பத்தினர் சிந்தும் ஒவ்வொரு துளி கண்ணீரையும் நினைவுகூருகிறார். இன்றும் அப்படிப்பட்ட குடும்பங்கள்மேல் தேவ தயவு தங்குகிறது.

### தெய்வீக அற்புதத்திற்காக உங்கள் குடும்பம் காத்திருக்கிறதா?

சிலவேளைகளில் குடும்பங்கள் தாமதத்தை, ஆரோக்கிய குறைபாடுகளை, உணர்வுரீதியான பாரங்களை கடந்துவர நேரிடலாம். அவை, மனுஷீக கட்டுப்பாடுகளை கடந்தவை. விசுவாசத்தோடு செய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பத்தையும் தேவன் கவனிக்கிறார். குடும்ப ஆசீர்வாத திட்டத்தின் மூலம் உங்கள் குடும்பத்திற்காக, இயேசு அழைக்கிறார் ஜெப வீரர்கள் விசுவாசத்தோடு ஜெபத்தை ஏறெடுக்கிறார்கள்.

பங்களிப்பையும் தாண்டி, உங்கள் குடும்பம் தேவனின் கிருபாசனத்தின் முன்பு நினைவுகூரப்படும் ஆவிக்குரிய மறைவை அடைவதே முக்கியம்.

“கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர்” (எண்ணாகமம் 6:24,25)

**இன்றே உங்கள் குடும்பத்தை ஜெபத்தில் இணைத்திடுங்கள்; நாளை தேவனின் உண்மையை அனுபவியுங்கள்.**

### இன்றே இணைத்திடுங்கள்

உங்கள் மாதாந்திர ஜெபம் மற்றும் பொருத்தனையை தெரிவு செய்திடுங்கள்

மாதந்தோறும் ரூ.100 / ரூ.500 / ரூ.1,000 / ரூ.5,000

இணையதளம்: www.jesuscalls.org/donate/fbp

குடும்ப ஆசீர்வாத திட்டத்திற்கான QR Code-ஐ ஸ்கேன் செய்திடுங்கள்

அன்பானவர்களே,
இந்த உலகம், செல்வத்தை, அந்தஸ்தை, வெளிப்புற சாதனைகளைக் கொண்டு வெற்றியை அளவிடுகிறது.
ஆனால், வேதமோ, மெய்யான செழிப்பு குறித்து,
**“செம்மையானவனுடைய கூடாரமோ செழிக்கும்”** (நீதிமொழிகள் 14:11)
என்று கூறி, முற்றிலும் வேறான பார்வையைக் கொண்டிருக்கிறது.

# நீதிமானின் குடும்பம் செழிக்கும்

தேவனின் பொருளாதாரத்தில், செழிப்பு என்பது தற்செயலாக நிகழ்வதல்ல; அது நீதியின் பலனாக இருக்கிறது. ஒரு குடும்பம் ஆண்டவருக்கு முன்பாக நேர்மையாக நடந்தால், தேவனுடைய ஆசீர்வாதம், அந்தக் குடும்பத்திலுள்ள தனிப்பட்டவர்கள் மேல் மட்டுமல்ல; சந்ததிகளுடனும் தங்கியிருக்கும்.

இந்தச் சத்தியத்தைக் குறித்த வல்லமையான சித்திரத்தை வேதம், “**நீதிமான் பனையைப்போல் செழித்து, லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவான்**” என்று காட்டுகிறது (சங்கீதம் 92:12). பனை மரமானது வறண்ட வானிலையுள்ள இடங்களிலும் செழித்து வளரும்; வெயில் காலங்களிலும் கனி கொடுக்கும். கேதுரு மரங்களும் அப்படியே ஓங்கி, உறுதியாக வளர்வதோடு, நீண்டகாலமாய் நிலைத்திருக்கும். அவை இரண்டும் ஸ்திரத்தன்மையையும், கனி கொடுப்பதையும், நீடித்த காலமிருப்பதையும் குறிக்கின்றன; அவைதாம் நீதிமானின் வாழ்க்கையில் காணப்படும் முக்கியக் கூறுகள் ஆகும்.

இஸ்ரேல் தேசத்துக்குச் செல்லும் ஒருவர், இந்த மரங்கள் ஓங்கி உயரமாக வளர்ந்திருப்பதையும், கனி கொடுப்பதையும், தேவனுடைய வார்த்தையான வேதம், கற்பனையாக அன்றி உண்மையாக இருப்பதையும் கண்டு ஜீவனுள்ள சாட்சியாக மாறுவார். அவ்வண்ணமே, நீதியில் வேரூன்றியுள்ள குடும்பங்கள், வளர்ந்து, விருத்தியாகி மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக விளங்கும்.

யோசுவா புஸ்தகத்தில் காணப்படும் ராகாபின் வாழ்க்கை இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது (2, 6ம் அதிகாரங்கள்). விசுவாசமும் கீழ்ப்படிதலும் சந்ததியையே மாற்றிவிடுவதை அது காட்டுகிறது. எரிகோவில் வசித்த ராகாபின் கடந்தகாலம் பாவம் நிறைந்தது. ஆனாலும், இஸ்ரவேலின் தேவனைக் குறித்துக் கேள்விப்பட்டதும் விசுவாசம் அவள் உள்ளத்தில் எழுந்தது. அவள் இஸ்ரவேலரின் வேவுக்காரர்களைப் பாதுகாக்க தீர்மானித்தாள்; தனிப்பட்டவிதத்தில் பெரும் ஆபத்தாக இருந்தாலும் தேவனுடைய நோக்கத்துடன் தன்னை இணைத்துக் கொண்டாள்.

ராகாபின் நீதி, அவளது கடந்த காலத்தைப்போல் இல்லாமல், தேவனுக்கு அவள் எப்படி பதில் செய்தாள் என்பதைக் கொண்டே தீர்மானிக்கப்



EvangelinePaulDhinakaran | evangeline@jesuscalls.org

பட்டது. எரிகோ விழுந்தபோது, அவளுடைய விசுவாசத்தினால் அவளும் அவள் வீட்டார் அனைவரும் கொல்லப்படாமல் விடப்பட்டனர். ராகாப் மட்டும் தப்பிப் பிழைக்கவில்லை; அவள் குடும்பத்தினரும் பிழைத்தனர் என்பதை வேதம் கவனத்துடன் பதிவு செய்துள்ளது. இன்னும் மேலாக, ராகாப் இயேசு கிறிஸ்துவின் வம்சவளியில் பங்கு பெறுகிறாள் (மத்தேயு 1:5). அது ஒரு தைரியமான செயலாக தொடங்கியது, அவளது சந்ததிக்கு ஆசீர்வாதமாக மாறியது, நித்தியத்திற்கான குறிப்பாகவும் உள்ளது.

குடும்பத்தில் ஒருவர் கர்த்தருக்குப் பயப்படும்போது, பலரின் வாழ்க்கையை மாற்றும் என்பதை ராகாபின் வாழ்க்கை உறுதிப்படுத்துகிறது. கீழ்ப்படிதலையும் விசுவாசத்தையும் பற்றியிருக்கும் வீட்டில் தேவனுடைய இரக்கமும் ஆசீர்வாதமும் தனியொருவரையும் தாண்டி அனைவருக்குமானதாக விளங்கும்.

யாத்திராகமம் புஸ்தகத்தில் இன்னொரு உதாரணத்தைக் காணலாம். எபிரெய மருத்துவச்சிகள் தேவனுக்குப் பயந்ததினால், பார்வோனின் பயங்கரமான கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்தார்கள். வேதத்தில், "இதினிமித்தம் தேவன் மருத்துவச்சிகளுக்கு நன்மை செய்தார்... மருத்துவச்சிகள் தேவனுக்குப் பயந்ததினால், அவர்களுடைய குடும்பங்கள் தழைக்கும்படி செய்தார்" என்று எழுதப்பட்டுள்ளது (யாத்திராகமம் 1:20,21). தேவன்மேல் அவர்கள் கொண்ட பயபக்தி, பாதுகாப்பையும், தனிப்பட்ட ஆசீர்வாதத்துடன் குடும்பத்தையும் விருத்தியாக்கும் தெய்வீக தயவையும் கொண்டு வந்தது.

> "குடும்பத்தில் ஒருவர் கர்த்தருக்குப் பயப்படும்போது, அந்த முடிவு, குடும்பத்தின் எதிர்காலத்தையும், வரும் சந்ததியின் எதிர்காலத்தையும் மாற்றும்"

தேவன், ஒரு நபர்மேல் பிரியமாயிருந்தால், அந்த பிரியம் அவர்கள் குடும்ப வாழ்வுக்குள்ளும் பாய்ந்து செல்லும் என்னும் நித்தியமான சத்தியத்தை இது வெளிப்படுத்துகிறது. நீதிமான்மேல் தேவன் கண்ணோக்கமாயிருப்பார்; அவனுக்கு வரும் பலன் ஒருபோதும் சிறியதாக இருக்காது.

இது வேத வரலாற்றுக்கு மட்டும் உரியதல்ல; நம்முடைய காலத்திலும் அது தொடருகிறது. வில்லியம் பூத், இரட்சண்ய சேனையின் ஸ்தாபகர். நீதிமானின் வாழ்க்கை, குடும்பம் முழுமைக்குமே ஆசீர்வாதமாக விளங்கும் என்பதற்கு நல்ல உதாரணமாவார். பூத்தும், அவர் மனைவி கேத்ரீனும் பரிசுத்தத்திற்கும் மனதுருக்கத்திற்கும் தேவனுக்குக் கீழ்ப்படிவதற்கும் தங்களை அதிகமாக அர்ப்பணித்திருந்தார்கள். ஜெபத்திலும், ஏழைகளுக்கும் விளிம்புநிலையிலுள்ளவர்களுக்கும் சேவை செய்யும்படியும் தங்கள் குடும்பத்தைக் கட்டியெழுப்பினார்கள். அவர்கள் பிள்ளைகள் ஊழியத்தில் வளர்க்கப்பட்டார்கள். நேர்மையுடனும், ஒழுக்கத்துடனும் ஆத்துமாக்கள்மேல் வாஞ்சையும் கொண்டிருந்தார்கள். குறிப்பாக, எட்டுப் பிள்ளைகளும் தங்கள் பெற்றோரின் தரிசனத்தை பெலத்தோடும் விசுவாசத்தோடும் முன்கொண்டு செல்லும்படி, இரட்சண்ய சேனையில் செயலூக்கம் நிறைந்த தலைவர்களாகவும் ஊழியர்களாகவும் விளங்கினார்கள். பூத்தின் குடும்பம், எதிர்ப்பையும், வறுமையையும், தியாகத்தையும் கடந்துவந்தாலும், உலக அளவில் அவர்கள் மரபு செழித்து வளர்ந்தது, ஆண்டவருக்கு முன்பாக உத்தமமாய் ஒரு குடும்பம் நடப்பது தலைமுறைகளுக்கு ஆசீர்வாதமாக விளங்கும் என்பதைக் காட்டுகிறது.

இன்று, உலகமெங்கும் கோடிக்கணக்கானோரின் வாழ்வில் நல்ல தாக்கத்தை உண்டாக்கும்வண்ணம் தேவனுக்கு உண்மையாக சேவை செய்வதை, தலைமையேற்று நடத்துவதை, போதிப்பதை அவர்கள் தொடர்ந்து செய்து வருகின்றனர். எல்லா குடும்பங்களிலும் பிரச்னைகள் இருக்கும் போதும், பெயர் பிரபலத்துக்காக அல்லாமல், விசுவாசத்தை அடுத்த தலைமுறைக்கும் கடத்தி, பிள்ளைகளை தேவனை நேசிக்கிறவர்களாக வளர்ப்பது வேதத்தில் செழிப்பான உள்ளத்தை காட்டுகிறது.

**"கர்த்தர் உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் வர்த்திக்கப்பண்ணுவார்"** (சங்கீதம் 115:14) என்று தேவனின் வாக்குத்தத்தம் தெளிவாக உள்ளது. நீதிமான்களின் குடும்பங்கள் பலவித உபத்திரவங்களை எதிர்நோக்கலாம்; ஆனாலும், அவை ஒரு போதும் கைவிடப்படாது. பனை மரங்களைப்போல அவை உறுதியாக நிற்கும்; கேதுரு மரங்களைப்போல காலப்போக்கில் திடமாக வளரும்.

அனுதினமும் தேவனுக்கு கீழ்ப்படிந்து, அவர்மேல் பயபக்தி கொண்டு, அவருடைய வார்த்தையை நம்புவதன் மூலம் நீதியாய் நடக்கத் தீர்மானிக்கும் குடும்பமானது, தேவ ஆசீர்வாதத்தை பெறும். அப்படிப்பட்ட குடும்பங்கள் ஆவிக்குரியவிதத்திலும் உறவிலும் சந்ததி சந்ததியாயும் செழிக்கும்.

ஆண்டவர்தாமே உங்கள்மேலும் உங்கள் வீட்டார் மேலும் பிரியமாயிருப்பாராக. உங்கள் வீடு, விசுவாசத்திலும் சமாதானத்திலும் நல்ல நோக்கத்திலும் செழிப்பதாக. நீதியாய் இருப்பது, செழிப்பான வாழ்க்கைக்கு வழிநடத்துகிறது என்பதற்கு, உங்களுக்குப் பிறகு வரும் சந்ததியும் சாட்சியாக எழும்புவதாக.

# உள்ளத்தின் ஆழத்திலிருந்து பேசுகிறேன்...



ஊழியத்தில் என் அன்பு பங்காளர்களே,

தேவனின் உண்மையை நாங்கள் தியானிக்கும் ஒவ்வொரு முறையும் எங்கள் உள்ளங்கள் உங்கள்பேரில் நன்றியால் நிறைகின்றன. உங்கள் பங்களிப்பு வெறுமனே நன்கொடையாக அல்ல; ஆண்டவர் எங்களுக்கு அருளும் தெய்வீக அருட்கொடையாக இருக்கிறது. ஜெபத்தினால், தியாகத்தினால், அசையாத விசுவாசத்தினால் நீங்கள் எங்களோடு நிற்பதையும் தம் ராஜ்யத்தில் நீங்கள் விதைக்கும் ஒவ்வொரு விதையையும் ஆண்டவர் காண்கிறார்.

**"வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள், திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப் புசிப்பார்கள்"** (ஏசாயா 65:21) என்ற வாக்குத்தத்தத்தை இம்மாதத்தில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் தேவன் தருகிறார். நீங்கள் ஸ்திரத்தன்மையை, கனி கொடுத்தலை, நிறைவேறுதலை காண்பீர்கள். உங்கள் பிரயாசம் வீணாகப்போகாது. நீங்கள் விசுவாசத்தினால் கட்டுவது நிலைத்திருக்கும். கீழ்ப்படிதலோடு விதைப்பது பெருத்த அறுவடையை தரும். எல்லாவிதங்களிலும் உங்கள் பிரயாசங்களுக்கான பலனை நீங்கள் காண்பீர்கள். உங்கள் பிரயாசத்தினால், வேறொருவர் அல்ல; நீங்களே நன்மையை அனுபவிப்பீர்கள்.

நீங்கள் எங்கள் ஊழியத்துடன் இணைந்து நடப்பதால், இந்த வாக்குத்தத்தத்தை தனிப்பட்டவிதத்தில் உங்கள் இல்லத்தில், உங்கள் வேலையில், உங்கள் அழைப்பில் அனுபவிப்பீர்களாக! விடாய்த்துப்போன, காணாமற்போன, நம்பிக்கையை தேடும் மக்களை சந்திக்கும் மிகப் பெரிய பொறுப்பை ஆண்டவர் நமக்கு அளித்திருக்கிறார். அவரது கிருபையினாலும், உங்கள் பங்களிப்பினாலும் நாங்கள் அவரது அன்பினை இன்னும் சந்திக்கப்படாதோருக்கு அறிவிக்க தொடருகிறோம்.

## துதி குறிப்புகள்

கடந்த மாதத்தில் பல்வேறு வழிகளில் 2 கோடி மக்களை ஊழியத்தின் மூலம் தொடுவதற்கு தேவன் உதவி செய்ததற்காக மிகவும் நன்றியுடன் இருக்கிறேன். ஜெப கோபுரங்களுக்கு 1,37,450 பேர் வந்து மன்றாட்டின் வல்லமையை அனுபவித்திருக்கிறார்கள். தொலைபேசி ஜெப கோபுர சேவை மூலம் 3,72,100 பேரும் பதிவு செய்யப்பட்ட பிரார்த்தனைகள் மூலம் 13,030 பேரும் ஆறுதலையும் அற்புதங்களையும் பெற்றிருக்கிறார்கள். சமூக ஊடக தளத்தின் மூலம் 22,71,750 பேர் சந்திக்கப் பட்டுள்ளனர். மின்பத்திரிகை (E-magazine) 1.5 லட்சம் வாசகருக்கு ஊழியம் செய்துள்ளது. 25,500க்கும் மேற்பட்ட கடிதங்களுக்கும், 33,850க்கும் மேற்பட்ட மின்னஞ்சல்களுக்கும் தேவ அன்பு மற்றும் வாக்குத்தத்தம் நிறைந்த வார்த்தைகளால் ஜெபத்துடன் பதில் அனுப்பப் பட்டுள்ளது. ஜெப கோபுரங்களில் நடத்தப்பட்ட 3,560 கூட்டங்கள் மூலம் 1,08,450 பேர் ஆசீர்வாதம் பெற்றுள்ளனர். 79 வெளியிட கூட்டங்களில் ஆண்டவர் வல்லமையாக அசைவாடி 1,120 பேரை ஆசீர்வதித்துள்ளார். வாராந்திர உபவாச கூட்டங்களில் 12,650 பேருக்கு உணவு அளிக்கப்பட்டுள்ளது. 'குடும்பம்' தொடரில் சமீபத்தில் அறிமுகம் செய்யப்பட்ட ஆசீர்வாதமான பிள்ளைகள் என்ற நிகழ்ச்சி 15 லட்சம் முறை பார்க்கப் பட்டுள்ளது. அது மக்களுக்கு எப்படி ஆசீர்வாதமாக அமைந்துள்ளது என்பது குறித்து கணக்கற்ற சாட்சிகள் வருகின்றன. உங்கள் ஆதரவினாலும் ஜெபங்களினாலும் சந்திக்கப்படும் ஆத்துமாக்களின் எண்ணிக்கை பெருகுவதால் தேவ நாமம் மகிமைப்படுகிறது.

என் தந்தை Dr.டி.ஜி.எஸ். தினகரன், தன் வாழ்க்கையின் இருண்ட கட்டத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்து தெய்வீக நம்பிக்கையை 1955 பிப்ரவரி 1 அன்று பெற்றுக்கொண்டார். அந்த நாளை "நம்பிக்கையின் நாளாக" அனுசரித்தோம். இந்த நம்பிக்கையின் 70வது நிறைவை கொண்டாடும்விதமாக பிப்ரவரி 11 முதல் 20ம் தேதி வரை ஜெப கோபுரங்களிலும் சமூக ஊடக தளங்களிலும் சிறப்புக் கூட்டங்கள் நடத்தப் பட்டன. கணக்கற்ற மக்கள் சந்திக்கப்பட்டனர்; பெலப்படுத்தப்பட்டனர். பள்ளிகள், மருத்துவமனைகள், எச்ஐவி மையங்கள் மற்றும் மனச்சோர்வு, மன அழுத்தத்தினால் தற்கொலை எண்ணங்கள் கொண்ட சமுதாயத்தினர் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தும் முயற்சிகள்

செய்யப்பட்டன. இந்த முயற்சிகள் வாயிலாக அநேக மக்கள் மறுரூபமடைந்திருப்பர் என்று விசுவாசிக்கிறேன்.

**மாணவர் பிரார்த்தனை:** சமீப வாரங்களில் தேவனுடைய வல்லமையான கரம் அசைவாடுவதை கண்டு வருகிறோம். 2026, பிப்ரவரி 1 அன்று சென்னை, செயின்ட் ஜார்ஜ் பள்ளி மைதானத்திலுள்ள விங்ஸ் கன்வென்ஷன் மையத்தில் நடைபெற்ற மாணவர் பிரார்த்தனை கூட்டத்தில் ஏறக்குறைய 4,000 இளம் பிள்ளைகள் ஆண்டவரின் பிரசன்னத்தால் தொடப்பட்டனர். பயம் விசுவாசத்தாலும், குழப்பம் தெளிவினாலும், பெலவீனம் பெலத்தினாலும் நிரப்பப்பட்டது. பல மாணவ மாணவியர் தங்கள் நம்பிக்கை, மன சமாதானம் புதுப்பிக்கப்பட்டதாகவும், தேர்வுகளுக்காக ஆயத்தம் செய்து கொண்டிருந்தபோது தெய்வீக உதவி கிடைத்ததாகவும் சாட்சி கூறினர்.

பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வின்போது பயத்தால் தடுமாறிக்கொண்டிருந்த 11ம் வகுப்பு மாணவியான இவாஞ்சலின் கூறிய சாட்சி ஊக்கமளிப்பதாக இருந்தது. 2025 ஜனவரி 15ம் தேதி சென்னை அடையாறில் நடைபெற்ற பங்காளர் கூட்டத்தில் அவர்கள் கலந்து கொண்டார்கள். நான் அவர்களுக்காக ஜெபித்துள்ளேன். அற்புதவிதமாக தேவன் அவர்கள் மனக்கலக்கத்தை மாற்றி தெய்வீக சமாதானத்தை கொடுத்துள்ளார். பயந்து நடுங்கிய அதே இளம் பெண் 497/500 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். அது, முழு மதிப்பெண்களோடு பள்ளியிலும் மாவட்டத்திலும் முதலிடமாகவும், மாநிலத்தில் மூன்றாவது இடமாகவும் அமைந்தது. அரசின் கல்வி உதவித்தொகையும் கிடைத்துள்ளது. தேவன், பயத்தை அசாதாரண வெற்றியாக மாற்றுவதில் அது வல்லமையான சாட்சியாக அமைந்தது.

> “ஈஸ்டர் கால சிறப்பு நிகழ்ச்சிகளை ஃபேமிலி சேனலில் அல்லது எங்கள் சமூக ஊடக தளங்களில் காணுங்கள்”

ஆண்டுதோறும் மாணவர்களின் ஜெப விண்ணப்பங்களுக்கு சங்கிலி ஜெபத்தின் மூலம் ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது; ஒவ்வொரு பாட தேர்வின் போதும் தேர்வு அட்டவணையின்படி ஜெபித்து வருகிறோம். அவர்கள் அடிகளை உறுதிப்படுத்தும் தேவன்தாமே அவர்கள் முயற்சிகளுக்கு வெற்றியை பலனாக தருவார் என்று திடமாக விசுவாசிக்கிறோம். உங்கள் பிள்ளைகளும் வாழ்வில் உயருவார்கள். தொலைபேசி ஜெப கோபுரத்தை தொடர்புகொள்ளுங்கள் அல்லது உங்களுக்கு அருகில் அமைந்துள்ள ஜெப கோபுரத்துக்கு நேரில் சென்று ஜெபித்துக்கொள்ளுங்கள். ஏறெக்கப்படும் ஜெபங்களுக்கு பதில் கிடைத்ததும் உங்கள் சாட்சிகளை அனுப்பி வையுங்கள்.

பெதஸ்தாவில் பிப்ரவரி 8ம் தேதி மதியம் நடந்த பெதஸ்தா ஆசீர்வாத கூட்டத்தில், இந்தியா முழுவதிலுமிருந்து ஏறக்குறைய 5,000 பேர் கலந்துகொண்டனர். தேவ பிரசன்னத்தை அனுபவித்தனர். இங்கு பகிரப்பட்ட சாட்சிகள் கூட்டத்தினரின் விசுவாசத்தை ஊக்குவித்தது. கோயம்புத்தூரைச் சேர்ந்த பரமேஸ்வரி என்ற சகோதரி, இதேபோன்ற ஒரு கூட்டத்தில் அவர்களை பெயர் சொல்லி அழைத்து, அவர்களுக்கு சொந்த வீடு ஆசீர்வாதமாக கிடைக்கும் என்று என் மூலம் தீர்க்கதரிசனம் வெளிப்பட்டது என்றும் தேவன் அதை நிறைவேற்றினார் என்றும் கூறினார்கள். நான் மீகா 2:13 என்ற வசனத்திலிருந்து விசுவாசத்துடன் கர்த்தர் தம் மக்களுக்கு முன்சென்று கட்டுகளை உடைக்கிறார், வியாதியை சுகமாக்குகிறார், சிலுவையில் தாம் பெற்ற வெற்றி மூலம் வாழ்க்கையை சீர்ப்படுத்துகிறார் என்று செய்தியளித்தேன். நாங்கள் இணைந்து ஜெபித்தபோது, தேவ வல்லமை மெய்யாகவே பலமாக பாய்ந்தது; சுகத்தையும் விடுதலையையும் புதுப்பித்தலையும் எல்லாருடைய இருதயங்களிலும் சொல்லொண்ணா சந்தோஷத்தையும் கொடுத்தது.

அன்று காலை நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் என் மகன் சாமுவேல் தினகரன், கூடி வந்திருந்த 1,000 மக்களுக்கு யோவான் 4:24 வசனத்தின் அடிப்படையில் செய்தியளித்து ஊழியம் செய்தார். ஆண்டவருக்கு முன்பு பயத்துடன் நடந்து அவருடைய வார்த்தையின் சத்தியத்தின்படி வாழ தேவன் நம்மை அழைத்துள்ளார் என்று நினைவுப்படுத்தினார்.

கோயம்புத்தூரிலுள்ள Trinity Prayer House, 50வது ஆண்டு விழாவை 2026 பிப்ரவரி 7ம் தேதி அனுசரித்தது. அங்கு ஊழியம் செய்தது மிக்க மகிழ்ச்சி. ஏசாயா 40:31 என்ற தேவ வாக்குத்தத்தத்தின் அடிப்படையில் புதுப்பெலன், பிரயாசத்துக்கு தெய்வீக நியாயம், நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போல நீதி பிரகாசிக்கும் என்று செய்தியளித்தேன். என் மனைவி இவாஞ்சலின் பால் தினகரன், ஊக்கமாக ஜெபித்ததுடன், பெருக்கமும், தெய்வீக பாதுகாப்பும் உண்டாகும் என்று கூறி ஜெபித்தார்.

கடந்த மாதத்தில் செய்யப்பட்ட ஊழிய முயற்சிகளின் மூலம் தேவ நாமம் மகிமைப்பட்டது.

### ஜெப விண்ணப்பங்கள்

### எஸ்தர் ஜெபக்குழு

இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் எஸ்தர் ஜெபக்குழு, உலகமெங்குமுள்ள பெண்கள், வாலிபப் பெண்கள், சிறு பெண்பிள்ளைகள் மற்றும் தம்பதியரை மன்றாட்டு ஜெபத்தினால் பிரகாசிக்கும்படி அழைக்கிறது. ஒரே ஒரு குழுவோடு தொடங்கிய இந்த ஜெபம், இந்தியாவில் கிட்டத்தட்ட அனைத்து மாநிலங்களிலும் 90 குழுக்களாகவும் உலகத்தில் 18 நாடுகளிலுமாக 2,250 குழுக்களாக விரிந்து, மெய்யாகவே சர்வதேச ஜெப இயக்கமாக செயல்பட்டு வருகிறது. பெண்களுக்கு எஸ்தர் ஜெபக்குழுக்கள், 14 முதல் 25 வயது வரையுள்ள வாலிபப் பெண்களுக்கு வாலிபப் பெண்கள் எஸ்தர் ஜெபக்குழுக்கள், 8 முதல் 13 வயது வரையுள்ள சிறுபிள்ளைகளுக்கு ஜூனியர் எஸ்தர் ஜெபக்குழுக்கள், திருமணமான தம்பதியருக்கு தம்பதியர்

எஸ்தர் ஜெபக்குழுக்கள் என நன்கு வரையறுக்கப்பட்ட பிரிவுகளாக இந்த ஊழியம் செயல்பட்டு வருகிறது. என் தாயார் சகோதரி ஸ்டெல்லா தினகரனால் கொடுக்கப்படும் ஜெபக்குறிப்புகளுக்காக அர்ப்பணிப்புடன் மாதந்தோறும் பல குழுவினர் ஜெபிக்கின்றனர். ஆவியானவரால் வழி நடத்தப்படும் இந்தக் குழுக்களால் கணக்கற்ற உறுப்பினர் கள் தங்கள் வாழ்வு மறுரூபமடைந்ததாக, ஜெபங்களுக்கு பதில் கிடைத்ததாக, ஆவிக்குரிய வளர்ச்சி அடைந்ததாக, குடும்பங்களில், கல்வியில், வேலையில், ஊழியத்தில் நல்ல மாற்றங்கள் நடப்பதாக கூறுகின்றனர். எஸ்தர் ஜெபக் குழுவின் மூலம் தேசமெங்கும் ஜெபிக்கிற பெண்கள் எழும்புவதோடு, பக்தியுள்ள குடும்பங்களும் உருவாக்கப் படுகின்றன.

சகோ. ஜேபஸ், சகோதரி கல்பனா ஜேபஸ் இருவரும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் டாலஸில் தம்பதியர் எஸ்தர் ஜெபக்குழு ஒருங்கிணைப்பாளர்களாக உள்ளனர். அவர்கள், தங்கள் குழுவில் உண்மையாக இருமாதங்கள் கலந்துகொண்ட ஒரு தம்பதியினர் கருத்தரித்து அழகிய குழந்தையை பிரசவித்ததாக சாட்சி கூறுகின்றனர். முன்பு சாட்சி கூற தயங்கியவர்கள் அநேகர் தேவ பிரசன்னத்தையும் குடும்பங்களில் நடந்த நல்ல மாற்றங்களையும் குறித்து இப்போது சாட்சி கூறுகின்றனர்.

உலகமெங்கும் தங்கள் குழுக்களில் ஏறெடுக்கப்பட்ட பிரார்த்தனைக்கு பதில் கிடைத்தது குறித்து மக்கள் பகிர்ந்து கொண்டுள்ள அத்தனை சாட்சிகளையும் இங்கே கூற முடியாது. உங்களுக்கு ஏற்ற பிரிவில் நீங்கள் இணைந்து உங்களுக்கும், உங்கள் குழுவினருக்கும் வாழ்க்கையில் மறுரூப அனுபவத்தை பெறும்படி அழைக்கிறேன். குழுவில் இணைவதற்கு அல்லது ஒரு குழுவை ஆரம்பிக்க நீங்கள் விரும்பினால் epg@jesuscalls.org என்ற மின்னஞ்சலை தொடர்புகொள்ளுங்கள்.

## எக்காள ஜெபக்குழு

தேசத்திற்காகவும் உலகத்திற்காகவும் ஜெபிப்பதோடு ஆண்டவரின் வருகைக்காக உள்ளங்களை ஆயத்தமாக்குவதற்காக எசேக்கியேல் 22:30 என்ற வசனத்தின் மூலம் என் மனைவி இவாஞ்சலின் பால் தினகரன் பெற்ற அழைப்பின்படி ஜெபிக்கும் உள்ளங்களை ஒருமித்து இணைத்து எக்காள ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட்டது. தேவனால் வழிநடத்தப்பட்டு என் மனைவி பகிர்ந்துகொள்ளும் ஜெபக்குறிப்புகளுக்காக, சராசரியாக 50 ஜெப வீரர்கள், ஒவ்வொரு நாளும் பிற்பகல் 1 முதல் 1:30 மணி வரை ஜெபிக்கிறார்கள். வந்து சேரும் ஜெபக்குறிப்புகளுக்காக தன்னார்வ ஜெப வீரர்களால் சங்கிலி ஜெபங்களும் ஏறெடுக்கப்படுகின்றன. 6380752257 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு அல்லது trumpet@jesuscalls.org என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்புகொண்டு எக்காள ஜெபக்குழுவில் இணைந்துகொள்ளும்படி உங்களை வரவேற்கிறேன்.

## எதிர்வரும் கூட்டங்கள்

நடக்க இருக்கும் கூட்டங்களுக்காகவும் பிரார்த்தனை திருவிழாக்களுக்காகவும் ஊக்கமாய் ஜெபிக்கும்படி உங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

2026 பிப்ரவரி 27 - மார்ச் 1 - அருமனை பிரார்த்தனை திருவிழா, கன்னியாகுமரி

2026 பிப்ரவரி 28 - பங்காளர் கூட்டம், காட்டாத்துறை

2026 மார்ச் 2 - தேசிய பிரார்த்தனை மற்றும் ஊழிய கூட்டமைப்பு - போதகர்கள் மற்றும் தலைவர்கள் கூட்டம், காட்டாத்துறை

2026 மார்ச் 13 - தேசிய பிரார்த்தனை மற்றும் ஊழிய கூட்டமைப்பு - போதகர்கள் மற்றும் தலைவர்கள் கூட்டம், சாங்லி, மகாராஷ்டிரா

2026 மார்ச் 13 - 15 - பிரார்த்தனை திருவிழா, சாங்லி, மகாராஷ்டிரா

2026 மார்ச் 14 - பங்காளர் கூட்டம், சாங்லி, மகாராஷ்டிரா

பல்லாயிரக்கணக்கானோர் ஜெபத்தின் மூலம் நம்பிக்கை பெற்றுக்கொள்ளும்படி இந்தக் கூட்டங்களை ஆயத்தப்படுத்துவதற்கு ஜெபித்து எங்களை தாங்குங்கள்; ஆண்டவர் வழிநடத்துவாரானால் இதற்காக பொருளாதார உதவியையும் செய்யுங்கள். நீங்கள் இந்தப் பகுதியில் அல்லது அருகில் வசித்தால் இக்கூட்டங்களில் கலந்துகொண்டு ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளும்படி அழைக்கிறேன்.

உயிர்த்தெழுந்த திருநாளான ஈஸ்டர் சிறப்பு காலம் நெருங்கியிருக்கிறபடியால், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், அதனால் கிடைக்கும் நம்பிக்கையையும் அறிவிக்கக்கூடிய அர்த்தமுள்ள நிகழ்ச்சிகளை ஃபேமிலி சேனலுக்காகவும் சமூக ஊடக தளங்களுக்காகவும் தயாரித்துக்கொண்டிருக்கிறோம். பார்த்து பயன் பெறுங்கள்.

அன்பு பங்காளரே, திடமனதுடன் தைரியமாயிருங்கள். ஆண்டவர் நம்மை மிகுந்த பொறுப்புடன் இருக்க வேண்டியதும், மிகுந்த அபிஷேகத்திற்குரியதுமான காலத்திற்குள் வழிநடத்துகிறார். ஊழியத்திற்கு மட்டுமல்லாமல் பங்காளரான உங்களுக்குள் இந்த காலம் அப்படியே இருக்கும். நீங்கள் எங்களோடு இணைந்திருப்பதால், புதிய கிருபையை, தெய்வீக தைரியத்தை, இயற்கைக்கப்பாற்பட்ட மாற்றங்களை அனுபவிப்பீர்களாக. தேவனுடைய பணியில் முன்னேறிச் செல்வதற்கான அபிஷேகம் உங்கள்மேலும், உங்கள் குடும்பத்தினர் மேலும் தங்கியிருப்பதாக.

"**மனுஷரே, திடமனதாயிருங்கள். எனக்குச் சொல்லப்பட்டபிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்**" (அப்போஸ்தலர் 27:25) என்று பவுல் கூறுகிறதுபோல, உறுதியான விசுவாசத்தோடு, தேவனால் உரைக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் அனைத்தும் அப்படியே நிறைவேறும் என்ற திடநம்பிக்கையோடு நீங்கள் முன்னேறவேண்டுமென்று ஜெபிக்கிறேன். எங்களோடு நிற்பதற்காக உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். நாம் இணைந்து தேவனுடைய ராஜ்யம் அவரது மகிமையோடு வெளிப்படுவதை காண்போம்.

உங்களுக்காக ஜெபிக்கும் உங்கள் அன்பு சகோதரன்,

Dr. பால் தினகரன்.

# ஹைதராபாத் ஜெப கோபுர கட்டட திட்டம்

## கர்த்தருடைய வீட்டைக் கட்டுங்கள்; கர்த்தர் உங்கள் வீட்டைக் கட்டுவார்




PROPOSED BUILDING ELEVATION

இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்கள் தெய்வீக அனுபவம் கிடைக்கும் இடங்களாக, ஜெபம் மற்றும் ஆலோசனை யின் மூலமாக தேவ வல்லமையின் வாயிலாக, வாழ்க்கையை மறுரூபமாக்கும் இடங்களாக விளங்குகின்றன. ஹைதராபாத் ஜெப கோபுரம், தெலுங்கானா மற்றும் அண்டை மாநிலங்களில் சுகத்தையும், வழிகாட்டுதலையும், சமாதானத்தையும், சீர்ப்படுத்துதலையும் நாடும் மக்களுக்கு நம்பிக்கையின் ஸ்தலமாக விளங்கி வருகிறது.



### விதைத்ததின் மூலம் கிடைத்த சொந்த வீடு

நானும் என் குடும்பத்தினரும் இயேசு அழைக்கிறார் ஊழியத்தில் பல ஆண்டுகளாக பங்காளர்களாக இருந்து வருகிறோம். இயேசு அழைக்கிறார் மூலம் நாங்கள் தேவனிடம் ஜெபிக்கின்றபோதெல்லாம் அவர் உண்மையாய் பதிலளித்தார். சொந்தமாக வீடு வாங்குவதற்கு நாங்கள் ஜெபத்துடன் திட்டமிட்டு வந்தோம். மே மாதத்தில் செகந்தராபாத் ஜெப கோபுரத்துக்கு சென்று, எங்கள் ஜெப விண்ணப்பத்தை ஜெப வீரர்களிடம் பகிர்ந்து கொண்டோம். அவர்கள் ஊக்கமாக ஜெபித்ததுடன், ஜெப கோபுர கட்டட நிதியில் விதைக்கும்படி எங்களை வழிநடத்தி னார்கள். நாங்களும் விசுவாசத்தோடு கீழ்ப்படிந்தோம். 15 நாட்களுக்குள்ளாக தேவன் அற்புதவிதமாக சொந்த வீட்டை தந்து எங்களை ஆசீர்வதித்தார். எங்கள் ஜெபங்களுக்குப் பதிலளித்து எங்களை ஆசீர்வதித்த தேவனுக்கே எல்லா மகிமையையும் செலுத்துகிறோம். எங்களுக்காக ஜெபித்த Dr. பால் தினகரனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஜெப வீரர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறோம். தேவனுக்கே சகல மகிமையும் உண்டாவதாக. - **ராதா**, செகந்தராபாத்.

ஹைதராபாத் ஜெப கோபுரத்தில் எழும்பும் பல சாட்சிகளில் இதுவும் ஒன்று.

ஹைதராபாத் ஜெப கோபுரத்தில் செய்யப்படும் ஜெபம் மற்றும் ஆலோசனை ஊழியத்தின் மூலம் 50 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பயனடைந்து வருகின்றனர். இன்னும் அநேகரை தொடுவதற்கு நாங்கள் ஜெபத்துடன் ஆயத்தமாகி வருகிறோம். அதற்கு உங்கள் ஜெபமும், பங்களிப்பும், பொருளாதார ஆதரவும் தேவை.



BUILDING UNDER CONSTRUCTION

### ஹைதராபாத் ஜெப கோபுரத்தில் செய்யப்படும் புதிய மேம்பாட்டுப் பணிகள்

- அனுதின கூட்டங்களுக்காக விசாலமான அரங்கம்
- தனி தியானமும் ஜெபமும் செய்வதற்கு அமைதியான தியான அறை
- மக்களுக்கு ஊழியம் செய்யும் ஜெப வீரர்களை பயிற்றுவிக்கும் பயிற்சி மையம்
- தெலுங்கானா, ஆந்திர பிரதேசம் மற்றும் ஒடிசா மக்களுக்கு ஊழியம் செய்யும் 24 மணி நேர தொலைபேசி மற்றும் டிஜிட்டல் ஜெப கோபுரம்
- அங்கீகரிக்கப்பட்ட இறையியல் கல்வியை வழங்கும் வேதாகம கல்லூரி
- விசுவாசத்தை பெலப்படுத்துவதற்காக சாட்சிகளை காட்சிப்படுத்தியுள்ள அற்புத அரங்கு
- சுவிசேஷ படங்களை தயாரிப்பதற்கான, தொகுப்பதற்கான மீடியா ஸ்டுடியோ
- ஜெப வீரர்களும் வேதாகம கல்லூரி மாணவர்களும் தங்குவதற்கான பொது அரங்கு (Dormitory Facilities)
- ஏழைகளுக்கு உணவு அளித்தல், இலவச ஆடை வழங்குதல், பெண்களுக்கும் நலிவுற்றோருக்கும் வாழ்வாதார பயிற்சியளிக்கும் மையம், வாலிபருக்கு ஆலோசனை மையம், சிறுபிள்ளைகளுக்கு கட்டணமில்லாமல் தனிப்பயிற்சி (டியூஷன்) மையம் உள்ளிட்டவை.
- ஏனைய அத்தியாவசிய வசதிகள்: லிப்ட், உணவகம், வாகன நிறுத்தம்

### நீங்கள் எவ்வாறு கொடுக்கலாம்?

**தேவன் உங்களை வழிநடத்துகிறவண்ணம் ஜெப கோபுர கட்டடம் கட்டுவதற்கு நன்கொடை அளித்திடுங்கள்.**

☐ ரூ. 1 லட்சம் ☐ ரூ.50,000 ☐ ரூ.25,000 ☐ எந்தத் தொகையும்

விதைக்கும் ஒவ்வொரு காணிக்கையும் கணக்கற்றோர் வாழ்க்கையைத் தொடும்; கர்த்தரின் வீட்டைக் கட்டுவதற்கு உதவும்.




# வாழ்வின் பாதையை அறிந்து கொள்ளுங்கள்

அன்பானவர்களே, புதிய ஒரு நிலைக்குள் அடியெடுத்து வைக்கும்போது, எந்தத் திசையில் செல்வது என்ற கேள்வி எழும். இந்த ஆண்டில் நாம் கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்ப்போம். முன்பு நமக்கு இருந்திராத பெலனை கடந்த மாதங்களில் தேவ கிருபை கூட்டித் தந்துள்ளதை நிச்சயமாக காண்போம். மெதுவாக ஏற்பட்ட தெளிவையும், நிச்சயமின்மையை கடந்து வரும்படி நம்மை சுமந்த நம்பிக்கையையும் நாம் உணருவோம். மார்ச் மாதத்தில் நாம் நுழையும்போது, தேவன், ''ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்'' (சங்கீதம் 16:11) என்ற அருமையான வாக்குத்தத்தத்தை தருகிறார். இது வெறுமனே நம்மை தேற்றுவதற்காக தரப்படுவதல்ல; மறுரூபப்படுத்துவதாகும். நம் வாழ்க்கை, வாய்ப்பின் அடிப்படையில் அமைந்ததல்ல என்பதை காட்டுகிறது. நம்மை தேவனுக்கு அர்ப்பணிக்கும்போது, அவர் முழு ஆளுகையையும் எடுத்துக்கொண்டு, நாம் நடக்கவேண்டிய பாதையை வெளிப்படுத்துவார்.




சங்கீதக்காரன், இந்த சத்தியத்தை மகிழ்ச்சியோடு அறிவிக்கிறான். தேவன், தம்மை தேடுகிறவர்களுக்கு மறைந்துகொள்வதில்லை என்பதில் களிகூருகிறான். மேலும், ''**உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது**'' என்றும் வேதத்தில் வாசிக்கிறோம் (சங்கீதம் 119:105). தேவனுடைய வழிகாட்டுதல், தூரமானதாகவோ இருக்காது. அவரது வசனம் ஒவ்வொரு அடியையும் பிரகாசிப்பிக்கும். இன்றைக்கு போதுமான வெளிச்சத்தையும், எப்போதும் திடநம்பிக்கையுடன் முன்னேறிச் செல்ல தேவையான வெளிச்சத்தையும் அளிக்கும்.



ஆனாலும், அநேக வாலிபர்கள், வாலிபப் பெண்கள் காணாமற்போனவர்களைப்போல, அடுத்த அடியைக் குறித்து நிச்சயமில்லாதவர்களாக, அழுத்தம், போட்டி, முரண்பாடான குரல்களின் மத்தியில் பயத்துடன் சென்று கொண்டிருக்கிறார்கள். வெற்றியை, நோக்கத்தை, எதிர் காலத்தைக் குறித்த கேள்விகள் அவர்கள் உள்ளங்களை கனமாய் அழுத்திக்கொண்டிருக்கலாம். ஆனால், தேவன் நம் பாதையை வெளிப்படுத்தும்போது, நம்மை மகிழ்ச்சியினாலும் நிரப்புவார் என்று வேதம் கூறுகிறது. நம் வாழ்வில் பயத்தை அகற்றி, சமாதானத்துடன் அவரே வழிநடத்துவார் என்பது நிச்சயம்.

தேவனுடைய வழிகாட்டுதலை அவரது பாதத்தில் காத்திருந்து அறிந்துகொள்ளவேண்டும் என்பதே


சாமுவேல் தினகரன்
samuel@jesuscalls.org samueldhinakaranofficial

## தேவனுக்காக காத்திருப்பது செயலற்ற ஒன்றல்ல; மாறாக, நம்பிக்கையின் செயல்பாடாகும்



இரகசியம். இளம் வயதிலிருந்தே, குடும்ப ஜெபத்தின் வழியாக இந்த அடிப்படையை நான் காண்கிறேன். ''என் பாதத்தில் காத்திரு'' என்ற இந்த எளிய சத்தியத்தை என் தாத்தா மூலமாகவும், தந்தை மூலமாகவும் ஆண்டவர் மீண்டும் மீண்டும் என் உள்ளத்தில் போட்டு வருகிறார். தேவனுக்காக காத்திருப்பது செயலற்ற ஒன்றல்ல; மாறாக, நம்பிக்கையின் செயல்பாடாகும். அவரது சமுகத்தில் வேதத்தை வாசித்து ஜெபித்து செவிகொடுக்கும்போது, அவர் நம்மை பெலப்படுத்துவார். படிப்படியாக நம் உள்ளம், அவரது சத்தத்தை கேட்கும்படி திரும்பும். முதலில் குழப்பமாக தோன்றியதெல்லாம், அவரது வழிகாட்டுதலில் பழக்கப்பட பழக்கப்பட தெளிவாகும்.

தேவன், நம் பாதையை நடைமுறை வழிகளில் வெளிப்படுத்துகிறார். நம் படிப்பு மற்றும் வாழ்க்கையைக் குறித்த தீர்மானங்கள் முக்கியமானதாகும். நம் கனவுகள், பெற்றோரின் எதிர்பார்ப்புகள், வழிகாட்டிகள், போதகர்கள், நண்பர்களின் ஆலோசனைகள் என்று இந்தத் தளத்தில் பல குரல்கள் கேட்கும். ஆலோசனைகள் முக்கியமானவை என்றாலும், அளவுக்கு மிஞ்சியதாக தோன்றக்கூடும். தேவன் ஆளுகை செய்கிறார் என்பதே நாம் கொண்டிருக்கக்கூடிய நிச்சயமாகும். அவர் நம் பெற்றோர் மூலமாக நம்மை வழிநடத்தலாம்; நம்பிக்கைக்குரிய தலைவர்கள் மூலமாக வழிநடத்துதலை உறுதிப்படுத்தலாம். அவருக்காகக் காத்திருக்கும்போது நம் உள்ளத்தில் நேரடியாக பேசலாம். அவரது நோக்கத்தை எந்த முரண்பாடான குரலும் தடம் மாறச் செய்ய முடியாது. அவர் தெரிந்தெடுத்த பாதையில் நாம் செல்கிறோம் என்பதை அவரே உறுதிப்படுத்துவார்.

ஏற்ற மக்களை, ஏற்ற நேரத்தில் நம் பாதையில் கொண்டுவருவது தேவன். அவர் நம் பாதையை அறிந்திருக்கிறார். உறவுகள் நம் பயணத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. தம் ஆலோசனையை, ஊக்கத்தை, ஞானத்தை சுமந்து செல்வதற்கான மக்களை தேவனே நமக்கு ஏற்படுத்துகிறார். அதேவேளையில் நல்லவை அல்லாத, வழிதப்பச் செய்கிற ஆலோசனைகளுக்கு நம் உள்ளத்தைப் பாதுகாக்கிறார். அவருக்குக் காத்திருக்க நாம் கற்றுக்கொள்ளும்போது, ஏற்ற வார்த்தைகளை, ஏற்ற மக்களிடமிருந்து நாம் பெற்றுக்கொள்ளும்படி நம்முடைய விவேகத்தை கூர்மையாக்குகிறார். தம் வேளையில் ஏற்ற வாழ்க்கைத் துணையை, நட்புகளை, அவரது எண்ணத்திற்கு இசைந்த ஆதரவை கொண்டு வருகிறார்.

இதுபோன்ற தெய்வீக வழிகாட்டுதலை நான் அனுபவித்திருக்கிறேன். கல்லூரியில் சேர நினைக்கும்போது, பல்வேறு தெரிவுகள் என் முன்னே இருந்தன. அக்கால கட்டத்தில், ஓர் ஊழியத்தில் இருந்த வாலிபர்கள் குழுவாக ஜெபித்துக்கொண்டிருந்தனர். அப்போது தேவன், நான் அவர்கள் கல்லூரியில் சேர்வேன் என்று தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்தினார். எதிர்பாராத அந்த உறுதிப்பாட்டின் மூலமாக, நான் தெளிவும் சமாதானமும் அடைந்தேன். அந்த வழிகாட்டுதலை நான் பின்பற்றினேன்; அந்தக் குறிப்பால், என் படிப்பை தேவன் ஆசீர்வதித்ததையும், அந்தத் தீர்மானத்தால் என் வாழ்வை உருவாக்கியதையும் தெளிவாகக் காண முடிந்தது. தவறான ஆலோசனையை நான் பின்பற்றியிருந்தால், முடிவு மிகவும் வித்தியாசமாக இருந்திருக்கும். தேவன், தன் இரக்கத்தினால் என் பாதையைக் காத்துக்கொண்டார்.

அதே தேவன் உங்கள் விருப்பங்கள் குறித்தும் வழிகாட்ட ஆவலாயிருக்கிறார். தம் பிள்ளைகளை வழிநடத்துவதில் அவர் பிரியமாயிருக்கிறார். உங்கள் வாழ்க்கையை அவர் கரங்களில் ஒப்படைத்தால், திறக்க முடியாது என்று தோன்றும் வாசல்களை திறந்து, நேர்முகத் தேர்வுகளில், கல்லூரி சேர்க்கையில் தயவு காட்டி தம் எண்ணத்தை ஸ்திரப்படுத்துவார்.

தேவனால் வழிநடத்தப்படுவது எவ்வளவு ஆசீர்வாதம்! நீங்கள் அவரை நம்புவதுபோல, வாழ்க்கையில் உங்கள் அடிகளை ஒழுங்குபடுத்தியும், உங்களைச் சுற்றிலும் சரியான மக்கள் இருக்கும்படி செய்தும், உங்கள் உள்ளத்தை சமாதானத்தாலும் சந்தோஷத்தாலும் நிறைத்தும் அவர் துடிப்பாக கிரியை செய்வதை நீங்கள் காண்பீர்கள். இதுவரை இல்லாதவண்ணம் இந்த மாதத்தில் அவரது வழிநடத்துதலை நீங்கள் அனுபவிப்பீர்கள். ஆண்டவர் உங்கள் வாழ்க்கைக்கான பாதையை அறிந்திருப்பதால், திடநம்பிக்கையுடன் முன்னேறுங்கள்.




# கேள்வி — பதில்

நான் விரும்பும் மதிப்பெண்களை என்னால் எடுக்க முடியாது என்று நினைக்கிறேன். முடியாதவை நடக்கும் என்று தேவனை

## எப்படி விசுவாசிப்பது?

- எஸ்தர் மிரியாம் கேட்டுள்ளார்

அன்பு தோழிக்கு,

தர்க்கம், அறிவியல், மனிதனின் எல்லைகள் இவற்றால் வடிவமைக்கப் பட்டுள்ள உலகில் நாம் பார்க்கிறவற்றை, உணர்கிறவற்றை தாண்டி மற்றவற்றை நம்புவது சிரமம். ஆனாலும், மனுஷனால் கூடாதவை தேவனால் கூடும் என்பதை வேதத்திலுள்ள உண்மைகளின் அடிப் படையில் நீங்கள் விசுவாசிக்கவேண்டும் என்று விரும்புகிறேன். இயேசுவின் பிறப்பே விசுவாசத்தை தழுவும்படி நம்மை அழைக்கிறது. கிறிஸ்துவின் பிறப்பை நாம் சிந்திக்கும்போது முன்னணை, தேவ தூதர்கள், மேய்ப்பர்கள், நட்சத்திரங்கள் என்று பல உருவங்கள் நம் மனதில் வரும். ஆனால், என்னை பொறுத்தவரையில், அதில், கன்னி கருத்தரித்த ஒரே ஒரு சத்தியம் தனித்து நிற்கிறது.

ஒரு மருத்துவராக, இந்த உண்மையைக் குறித்து அடிக்கடி நான் யோசிப்பதுண்டு. மருத்துவ நோக்கில் இது முடியவே முடியாத ஒன்று. மனித உயிரியல் குறித்து அறியப்பட்டுள்ள எல்லா விதியையும் அது மறுக்கிறது. ஆனாலும், தமது பரிபூரண நோக்கம் நிறைவேறும்படி தேவன் முடியவே முடியாத ஒன்றை தெரிந்தெடுத்தார். மரியாள் என்ற பெயர் கொண்ட கன்னியின் வழியாக உலகின் இரட்சகரான இயேசு கிறிஸ்து மனித வரலாற்றினுள் நுழைந்தார். மனுக்குலத்தால் ஒருபோதும் செய்ய முடியாத ஒன்றை, தம் தெய்வீக வல்லமையின் வாயிலாக தேவன் நிறைவேற்றினார்.

கிறிஸ்து, முதலாவது கன்னியிடம் பிறந்ததே மனுஷரால் கூடாதவற்றை செய்வதே தேவனின் சிறப்பு. இயேசுவின் வாக்கு அதை விளக்குகிறது (லூக்கா 18:27).

நம்மில் அநேகர் இன்றைக்கு முடியாது என்ற சூழ்நிலைகளை எதிர்கொள்ளலாம். அதைரியப்படுத்தக்கூடிய இறுதியான அறிக்கையின்படி வியாதியோடு ஆண்டுக்கணக்கில் நீங்கள் போராடிக்கொண்டிருக்கலாம். ஒரு வேலை கிடைக்கவேண்டுமென்று நீங்கள் ஜெபித்துக்கொண்டிருக்கலாம்; ஆனாலும், கதவுகள் அடைக்கப்பட்டதாக அந்தப் பதவி எட்ட முடியாததாக தோன்றலாம். உங்கள் குடும்பத்தில், இல்லறத்தில், உள்ளத்தில் ஏதோ ஒரு பாரம் இருக்கலாம். அதைக் குறித்து உங்கள் உள்ளம், "இது ஒருபோதும் மாறாது" என்று முணுமுணுக்கலாம்.

மரியாளின் வாழ்க்கையில் அற்புதம் செய்த அதே தேவன் இன்றும் கிரியை செய்துகொண்டிருக்கிறார். இந்த மாதம், தேவன் உங்கள் வாழ்க்கையை மறுரூபப்படுத்துவதற்காக இயலாத





Dr. ஷில்பா தினகரன் பதிலளிக்கிறார்

**விசுவாசம், உண்மையை மறுக்காது; அது, உண்மையைக் காட்டிலும் தேவன் பெரியவர் என்று ஒப்புக்கொள்ளும்**

காரியங்களை அனுமதிக்கிறார் என்பதை நினைவுப் படுத்த விரும்புகிறேன்.

சிரோமணி என்ற சகோதரி கருப்பை புற்றுநோயாய் பாதிக்கப்பட்டு, இறுதிக் கட்டத்தில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்கள். எதுவும் செய்யமுடியாத நிலையில், மருத்துவர்கள் நம்பிக்கையில்லை என்று கூறிவிட்டனர். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நான் அந்த சகோதரிக்காக ஜெபித்து, தேவன் அவர்களைக் குணமாக்குவார் என்று தைரியமாகக் கூறினேன். ஜெபித்த பிறகு அவர்கள் அடிக்கடி நோய் வாய்ப்பட்டார்கள். புற்றுநோய் மேலும் பரவியிருக்கிறதா என்று சோதனை (PET scan) செய்ய மருத்துவர்கள் ஆலோசனை கூறினார்கள். அந்தக் கட்டத்தில் நம்பிக்கை இருப்பதற்கான ஓர் அறிகுறியும் இல்லை. ஆனாலும், பரிசோதனை அறிக்கை வந்தபோது, முற்றிலும் இயல்பாக (normal) இருக்கிறார்கள் என்று தெரிந்தது. புற்றுநோய்க்கான எந்த அறிகுறியும் இல்லை. ஆச்சரியப்பட்ட மருத்துவர்கள் இப்படி அசாதாரண அறிக்கை வருவதற்கு காரணம் என்னவாக இருக்கும் என்று அவர்கள் மகளிடம் விசாரித்தனர். அவர்கள் மகள், "நாங்கள் தேவனிடம் ஜெபித்தோம்" என்று கூறியுள்ளார்கள். இயல்பாக உள்ளது என்ற அந்த அறிக்கையை பார்த்து அனைவரும் வியந்துள்ளனர். இப்போது சகோதரி சிரோமணி தேவ கிருபையினால் பூரண சுகத்தோடு வீட்டில் இருக்கிறார்கள்.

முடிவு என்று கருதப்பட்டதை தேவன் உயிர்த்தெழப்பண்ணினார். முறிந்துபோனதை சீர்ப்படுத்தினார். இந்த தேவனைதாம் நாம் சேவிக்கிறோம். அவர் முடியாதவற்றின் தேவனாயிருக்கிறார்.

நீங்கள் வியாதிப்பட்டால், குடும்பத்தில் சண்டைகள் இருந்தால், உணர்வுரீதியான வேதனைகள் இருந்தால் அல்லது நிச்சயமின்மை எழுந்தால் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். மனுஷீக எல்லைகளின்படி உங்கள் எதிர்காலத்தை அளவிடாதீர்கள். கடந்த கால அறிக்கைகள், தேவனால் என்ன செய்ய முடியும் என்பதை நிர்மாணிக்கவிடாதீர்கள்.

தான் எப்படி கருத்தரிக்க முடியும் என்று மரியாள் புரிந்துகொள்ளவில்லை. ஆனால், விசுவாசத்தில் தன்னை அர்ப்பணித்தாள். இந்தச் சாட்சியிலும் அத்தம்பதிக்கு வழி எதுவும் காணப்படவில்லை; ஆனால், எப்படியாயினும் தேவனை நம்பினார்கள். விசுவாசம், உண்மையை மறுக்காது; அது தேவன், உண்மையைக் காட்டிலும் பெரியவர் என்று ஒப்புக்கொள்ளும்.

வாழ்வின் எல்லா நிலைகளிலும் நம்பிக்கையை பற்றிக்கொள்ளுங்கள். விசுவாசத்தில் உறுதியாயிருங்கள். நீங்கள் உடனடி மாற்றம் எதையுமே பார்க்க முடியாத நிலையிலும் தேவன் பின்னணியில் கிரியை செய்து கொண்டிருக்கிறார் என்று விசுவாசியுங்கள். ஓர் அதிசயத்தின் வாயிலாக இயேசுவை இந்த உலகத்திற்குக் கொண்டு வந்த அதே தேவன், இன்றும் உங்கள் வாழ்க்கையில் இருக்கிறார். வல்லமை இல்லாத தேவனை நீங்கள் சேவிக்கவில்லை. கூடாதவைகளின் தேவனானவரை நீங்கள் சேவிக்கிறீர்கள். தேவனால் எல்லாம் கூடும் என்பதை மறந்துபோகாதிருங்கள். தேவனோடு இருந்து, முடியாதவற்றையும் சாதித்திடுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.


JESUS CALLS
PRAYING FOR THE WORLD

THE Promise 2026 SONG



WATCH THE SONG ON
JESUSCALLSTAMIL


WATCH THE SONG ON
JESUSCALLSTELUGU



WATCH THE SONG ON
JESUSCALLS


WATCH THE SONG ON
JESUSCALLSKANNADA

SCAN AND WATCH SONG

SHARE THE SONG WITH YOUR LOVED ONES AND CARRY FORWARD GOD'S BLESSINGS.


"உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன்; நான் உன்னைத் தெரிந்துகொண்டேன்" (ஆகாய் 2:23)



**உங்கள் பிள்ளைகள் ஞானத்திலும் அறிவிலும் தேவ கிருபையிலும் சிறந்து விளங்கவேண்டும் என்று விரும்புகிறீர்களா?**

2026

# டைனமிக் கிட்ஸ் கேம்ப்



ஜெப கோபுரத்தில் 6 நாட்கள் நடைபெறும் டைனமிக் கிட்ஸ் கேம்ப்-க்கு உங்கள் பிள்ளைகளை அழைத்து வாருங்கள் (6 முதல் 12 வயது பிள்ளைகளுக்கு)



**ஏப்ரல் / மே 2026**

இசை, பாடல், நடனம், மைம், கிராஃப்ட், வண்ணம் தீட்டுதல் மற்றும் பல்வேறு விளையாட்டுகள் மூலம் பிள்ளைகளுக்கு வேதத்தின் அதிசயங்களை போதிப்போம். வேதாகம மாந்தர்களைக் குறித்து அவர்கள் அறிந்துகொள்வதுடன், புதிதாக நல்ல நண்பர்களையும் பெற்றுக்கொள்வார்கள்.

**விடுமுறை நாட்களில் உங்கள் பிள்ளைகள் இயேசுவைக் குறித்து அறிந்து அனுபவிக்க உதவும் இந்த வாய்ப்பை தவறவிடாதீர்கள். பிள்ளைகளை இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்திற்கு அழைத்து வாருங்கள்!**

இந்தியா முழுவதும் அனைத்து ஜெப கோபுரங்களிலும் நடைபெறுகிறது

**அனுமதி இலவசம்!**

**இடம்: உங்கள் பகுதியில் அமைந்துள்ள இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம்**

**காலம்: 6 நாட்கள்**





மேலும் விவரங்களை அறிந்துகொள்ள தொடர்புகொள்ளுங்கள்

* உங்கள் பகுதி ஜெப கோபுரம்

இணையதளம்: www.jesuscalls.org

மின்னஞ்சல்: prayeracademy@jesuscalls.org

**செம்பொருள்: முத்திரை மோதிரம் 2026**

**இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்து எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.**

பெயர்: ........................................................................ பங்காளர் எண்: ........................................

பிறந்த தேதி: ...................................................... முகவரி: ..................................................................

.................................................................................................................................................

மொபைல்: ........................................................... இமெயில்: ...................................................

☐ ஒரு பிள்ளைக்கு ரூ.300/- ☐ இரண்டு பிள்ளைகளுக்கு ரூ.600/-

☐ நான் ............... பிள்ளைகளுக்காக ரூ............. அனுப்புகிறேன்.

**இந்தக் கோடைக்காலத்தில் காணிக்கை அனுப்பி, டைனமிக் கிட்ஸ் கேம்ப் ஊழியத்தில் பங்காளராகி 20,000 பிள்ளைகள் வாழ்வில் நன்மையான மாற்றத்தை உண்டாக்கலாம்.**

Scan QR Code

சிறுவர் பகுதி



# ஜிம் & ஜெமி

## அந்தரங்கத்திலும் உண்மை
















**கதையின் நீதி:**
யாரும் பார்க்காதபோதும் உண்மையாயிருப்பது, ஏற்றவேளையில் தேவனிடமிருந்து பலனைப் பெறச் செய்யும்

மனப்பாட வசனம்:
**“அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்”**
(மத்தேயு 6:4)



# கிறிஸ்து அருளும் பிரகாசமான வாழ்வு!

**“வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே!”**

என்று யோவான் சுவிசேஷம் 5:39-ல் வாசிக்கிறபடியே, நாம் வேத வசனங்களை பயபக்தியோடுகூட வாசித்து தியானிக்கும்பொழுது, அவைகள் “நித்திய ஜீவனை” பெற்றுக்கொள்ளும் தெய்வீகமான பாதைக்கு நேராக நம்மை அருமையாக வழிநடத்தும். ஆம் பிரியமானவர்களே! நாம் அனுதினமும் கர்த்தருடைய வார்த்தையாகிய வேத வசனங்களை பயபக்தியோடும், கருத்தோடும் வாசிக்க வேண்டும். அப்பொழுது, கர்த்தர் தமது வார்த்தையின் மூலமாக நம்மோடு பேசுவார். சகலவிதமான ஆசீர்வாதங்கள் நிறைந்த தெய்வீக அனுபவங்களை நமக்கு அருளுவார். இத்தகைய மேலான பாக்கிய வாழ்வைப் பெற நாம் எவ்வாறு செயல்பட வேண்டும்?

### கிறிஸ்துவுக்கென்று எழும்பிப் பிரகாசிப்போம்!

அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், கிறிஸ்துவுக்கென்று எழும்பிப் பிரகாசிக்க வேண்டும் (எபேசியர் 5:11,14) என்று வேதம் சொல்லுகிறது. கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளை நாம் கடிந்துகொள்வோம். அப்பொழுது கிறிஸ்து நமது வாழ்வை பிரகாசிக்கப்பண்ணுவார். ஆதாம், ஏவாளின் வாழ்க்கையைப் பாருங்கள்! சகலவிதமான தெய்வீக ஆசீர்வாதங்கள் நிறைந்த பாக்கியமான சூழ்நிலையில் தேவன் அவர்களை வைத்திருந்தார். ஒரே ஒரு பழத்தை மாத்திரம் தொட வேண்டாமென்று அவர்களுக்கு கட்டளையிட்டிருந்தார். ஆனால் அவர்களோ, தேவன் எதை வேண்டாமென்று கூறினாரோ அதையே இச்சித்து, துணிந்து செயல்படுத்தினார்கள். அதற்கு காரணம், பிசாசானவன் அவர்களுக்குள் இச்சையை உண்டு பண்ணி, அவர்களை அவ்வாறு இருளில் இருக்கப் பண்ணினான் (சங்கீதம் 143:3).

**“மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷன்”** (எபேசியர் 4:22).

இவைகளையெல்லாம் நீங்கள் களைந்துபோட்டு, தேவ சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்ளுங்கள் (எபேசியர் 4:24). யோவான் 4-ம் அதிகாரத்தில் ஆண்டவராகிய இயேசுவை சந்திக்க நேர்ந்த ஒரு சமாரியப் பெண், அவள் ஆண்டவரண்டை வரும்பொழுது பயங்கரமான பாவ இருள் நிறைந்த வாழ்வில் நிலைத்திருந்தாள். ஆனால், ஆண்டவர் இயேசுவின் வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில், மற்றவர்களுக்கு அவரைப்பற்றிய சாட்சியை அறிவிக்கும்படி “விசுவாசியாக” மாறினாள். “அந்த ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம் அந்த ஊரிலுள்ள சமாரியரில் அநேகர் ஆண்டவர் இயேசுவின்மீது விசுவாசமுள்ளவர்களானார்கள்! என்று வேதத்தில் வாசிக்கிறோம் (யோவான் 4:39). அவ்வாறே, அப்போஸ்தலர் 9ஆம் அதிகாரத்தில், சவுல் என்ற கேட்டின் புத்திரனை, “ஒளிமயமானவராகிய



ஸ்டெல்லா தினகரன் / stella@jesuscalls.org

இயேசு'' நேரில் சந்தித்தபொழுது, அவன் ''கிருபா பாத்திரமாக'' மாறி (ரோமர் 9:23), அந்தகார வாழ்விலிருந்து முற்றிலும் விடுவிக்கப்பட்டவனாக, அநேகரை அத்தகைய தெய்வீக வழியினைப் பின்பற்றுகிறவர்களாக மாற்றுவதற்கான ''கனி தரும் செடியாக'' வாழ்ந்தான் என்றும், அவ்வாறு தேவனுடைய தெய்வீக சேவையை நிறைவேற்றுவதினிமித்தம் அவனது வாழ்வில் எத்தனையாய் பாடுகள், துன்பங்கள் வழியே அவன் கடந்துசென்றான் என்றும் நாம் வேதத்தில் வாசிக்கிறோமல்லவா?

**நீங்கள் கிறிஸ்து இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டதோடு நின்றுவிடாமல், கர்த்தருக்குள் வேர் கொண்டு வாழ உங்களை அர்ப்பணியுங்கள்**

பிரியமானவர்களே, இன்றைக்கு நீங்களும்கூட அந்தகாரத்திற்கு அடிமைப்பட்டு இருளில் வாழ்கிறீர்களா? அல்லது ஆண்டவர் இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டவர்களாய், வெளிச்சத்தின் பிள்ளைகளாக ''கனிதரும் வாழ்வை'' வாழ்ந்துகொண்டிருக்கிறீர்களா? என்று உங்களுடைய வாழ்க்கையை சற்று ஆராய்ந்து பாருங்கள்.

ஒரு தம்பதியர் தங்கள் குடும்ப வாழ்வில் கர்த்தர் அருளும் தெய்வீக சமாதானம் எதுவுமின்றி வாழ்ந்து கொண்டிருந்தனர். எனினும், மனைவியோ கர்த்தரை பயபக்தியுடன் நாடித்தேடி, அவருக்கென்று ''கனிதரும் பாத்திரமாக'' விளங்கி வந்தாள். புருஷனோ அதற்கு நேர்மாறாக பிசாசின் வழிகளில் சிக்கி, இருள் நிறைந்த அந்தகாரத்தின் பாதையில் நடந்துகொண்டிருந்தான். கர்த்தர் அந்த மனைவியின் இடைவிடாத பயபக்தி நிறைந்த ஜெபங்களைக் கேட்டு, அவனுடைய கடின இருதயத்தை உடைத்தார். தன் மனைவியோடு இணைந்து கர்த்தரைத் தேடும் பயபக்தி, பரிசுத்தம் நிறைந்த தெய்வீக வழிகளில் அவனும் மனம்திரும்பி நடக்கும்படியாக அவரே அவனை வழிநடத்தினார். அவர்கள் குடும்ப வாழ்விலிருந்த இருள் யாவும் மறைந்தது. இருவரும் ஒருமித்து பயபக்தியும், பரிசுத்தமும் நிறைந்த தெய்வீக வழிகளில் நடந்து கர்த்தருக்கென்று மகிமையாய் வாழும் தெய்வீக வாழ்வைப் பெற்றனர்.

அன்பானவர்களே, இன்று நீங்களும் உங்கள் சொந்த வாழ்வினை சற்று ஆராய்ந்து பாருங்கள். அது தெய்வீகமும், தேவ சமாதானமும், சந்தோஷமும் நிறைந்ததாய் இருக்கிறதா? அல்லது பாவ இருள் நிறைந்ததாய், பிசாசுக்கு அடிமைப்பட்ட வாழ்வாக இருக்கிறதா? கொலோசெயர் 1:13-ல் வாசிக்கிறபடியே, ஒவ்வொருவரும் இருளின் அந்தகாரத்தினின்று விடுதலை பெற்று தேவ குமாரனின் இராஜ்யத்திற்கு உட்பட்டவர்களாக மாற தேவன் தாமே கிருபைபுரிவாராக.

## கிறிஸ்துவுக்குள் வேர் கொண்ட வாழ்வு

கொலோசெயர் 2:6,7 ஆகிய வேத வசனங்களில் வாசிப்பதுபோன்று, கிறிஸ்துவுக்குள் வேர் கொண்ட வாழ்வு வாழ, அவர்மேல் கட்டப்பட்ட தெய்வீக வாழ்வைப் பெறுவீர்களாக! இவ்விதமான கிறிஸ்துவுக்குள் வேர் கொண்ட வாழ்வைப் பெறுவது எப்படி?

எபேசியர் 3:16,17,19 ஆகிய வசனங்களில் வாசிப்பது போன்ற தெய்வீக அனுபவங்களை நாம் நம்முடைய வாழ்வில் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்வே இதற்கு முன்மாதிரியானது!

> **''நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்.''**
>
> (அப்போஸ்தலர் 10:38)

அவர் தேவ குமாரனாக இருந்தபொழுதிலும், மேற்கண்ட வசனத்தின்படி, பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் நிறைந்த தெய்வீக அனுபவத்தை பெற்றிருந்தார். அதேபோன்று, அப்போஸ்தலர் 1:5,8 ஆகிய வசனங்களில், தேவனுடைய பாதத்தில் பயபக்தியோடு காத்திருந்து அந்தவிதமான தெய்வீக வல்லமையினால் நிறைந்த தெய்வீக வாழ்வைப் பெறும்படி, மரணத்தை ஜெயித்து உயிரோடெழுந்தவராக தம்முடைய சீஷரிடத்திலும் அவர் போதித்தார். அதன்படியே, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு பயபக்தியோடு கூடி ஜெபித்தபொழுது (அப்போஸ்தலர் 1:14), தேவன் அவர்கள் மீது தம்முடைய பரிசுத்த ஆவியானவரை நிறைவாய் பொழிந்தருளிய தெய்வீக அனுபவங்களைக் குறித்து வேதத்தில் வாசிக்கிறோம் (அப்போஸ்தலர் 2-ம் அதிகாரம்). இவ்விதமாக சீஷர்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவுக்குள் பரிசுத்த ஆவியானவரின் நிறைவின் மூலம் அவரில் வேர்கொண்ட வாழ்வைப் பெற்றனர். அதன்பிறகு பரிசுத்த ஆவியானவரின் வரங்களினாலும், கனிகளினாலும் நிறைந்தவர்களாக தேவனுக்கென்று நற்கனிதரும் தெய்வீக வாழ்வையும் பெற்றனர். கேட்டின் புத்திரனான யூதாஸ் மாத்திரம் அதை இழந்துபோனான்.

தேவ கிருபையினால் எங்களுடைய குடும்பமும் அவ்வாறே பரிசுத்த ஆவியினால் நிறைந்து, ''கிறிஸ்துவுக்குள் வேர்கொண்ட வாழ்வை'' வாழ்ந்து வருகிறது. இயேசு அழைக்கிறார் ஊழியமும், சகோதரர் தினகரன் கரங்களில் ஒப்புவிக்கப்பட்டது. நாங்கள் குடும்பமாகப் பெற்ற இந்தவிதமான கிறிஸ்துவுக்குள் வேர்கொண்ட வாழ்வினை, தொடர்ந்து ஏராளமான மக்களும்

பெற்றனர். பல ஊழியர்களும் எழும்பினர். பல குடும்பங்களும் ஆவிக்குரிய உயர்வைப் பெற்று கர்த்தருக்குள் கட்டப்பட்ட பாக்கிய வாழ்வைப் பெற்றன.

அன்பானவர்களே, நீங்களும் இதேவண்ணமாக, கிறிஸ்து இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டதோடு நின்று விடாமல், அவருக்குள் பரிசுத்த ஆவியின் நிறைவின் மூலம் கட்டப்பட்டவர்களாக, அவருக்குள் நடந்துகொள்ளும் பாக்கியம் நிறைந்த தெய்வீக வாழ்வினைப் பெற்று, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, கர்த்தருக்குள் வேர் கொண்டு வாழ உங்களை பயபக்தியுடன் அர்ப்பணியுங்கள்.

**கர்த்தர் தமது ஆவியினால் நம்மை நிறைத்து, கனிதரும் தெய்வீக வாழ்வை நமக்கு அருளி, பிரகாசிக்க செய்கிறார்**

### விசுவாசத்தில் பெருகுவீர்கள்

**''விசுவாசத்தில் உறுதிப்பட்டு நிற்பதோடு ஸ்தோத்திரத்தோடேகூட அதிலே பெருகுவீர்களாக''**

(கொலோசெயர் 2:7).

என்று வேதம் சொல்லுகிறது. தேவ மனிதனாகிய தாவீதைப் பாருங்கள்: ''**கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்**'' (சங்கீதம் 34:1) என்று கூறுகிறான்.

அநேகர் இணைந்து இவ்விதமாக ஆவியில் அனல் கொண்டவர்களாக கர்த்தரை ஸ்தோத்திரிக்கும்பொழுது, தேவ கிருபை பெருகும் (2 கொரிந்தியர் 4:15). அதோடு கூட, நம் தேவன் ''துதிகளுக்குள் வாசம்பண்ணுகிறவர்'' என்றும், ''இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீர் பரிசுத்தர்'' என்றும் நாம் வேதத்தில் வாசிக்கிறோம் (சங்கீதம் 22:3).

தேவ மனிதனாகிய தானியேலின் தெய்வீகமான வாழ்வைப் பாருங்கள். அவனுடைய வாழ்விலே ஒரு பெரிய பிரச்னை வந்தது. அவன் தேவனை உண்மை மனதோடும், பயபக்தியோடும் தேடினபடியினால், தானியேல் 6:3-ல் வாசிப்பதுபோன்று, அவனுக்குள் விசேஷித்த ஆவி இருந்தது. இராஜா அவனை தன் இராஜ்ஜியம் முழுவதற்கும் அதிகாரியாக ஏற்படுத்த எண்ணினான். இதினிமித்தம் அந்த தேசத்து பிரதானிகளும், தேசாதிபதிகளும் அவனை குற்றப்படுத்தும்படி முகாந்தரம் தேடினார்கள். எனவே, தானியேலை அவனுடைய தேவனைப் பற்றிய, வேத விஷயத்திலே குற்றப்படுத்தும் முகாந்தரத்தை கண்டுபிடிக்க முயற்சித்தனர். தானியேல் 6:7-ல் வாசிப்பதுபோல், எவனாகிலும் முப்பது நாள் வரையில் இராஜாவைத் தவிர வேறு எந்த தேவனையோ அல்லது மனுஷனையோ நோக்கி விண்ணப்பம் பண்ணினால் சிங்கக்கெபியிலே போடப்பட வேண்டுமென்ற தாக்கீதை பிறப்பித்து, அதற்கு இராஜாவின் கையெழுத்தையும் பெற்றுக் கொண்டனர்.

தானியேல் இவைகளையெல்லாம் அறிந்திருந்தும், ''தான் முன்பு செய்து வந்தபடியே தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்கால்படியிட்டு ஜெபம் பண்ணி ஸ்தோத்திரம் செலுத்தினான்'' (தானியேல் 6:10). இதை அந்த பொல்லாத மனுஷர் யாவரும் கண்டனர். அதை இராஜாவுக்கு அறிவித்து, இராஜாவின் கையெழுத்தின்படி, அவனை சிங்கக்கெபியிலே அடைக்க உத்தரவையும் பெற்றனர். இராஜாவும் வேறு வழியின்றி தானியேலை சிங்கக்கெபியிலே போட்டபொழுது, அங்கு தேவன் அற்புதமான ஒரு கிரியையை நடப்பித்தார். காலமே எழுந்து சிங்கக்கெபியண்டையில் சென்ற இராஜா, ''தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடைவிடாமல் ஆராதிக்கிற தேவன் உன்னை தப்புவிக்க வல்லவராக இருந்தாரா?'' என்று துயர தொனியோடு கேட்டபொழுது, தானியேல் சிங்கக்கெபிக்குள்ளிருந்து, ''இராஜாவே, நான் தேவனுக்கு முன்பாகவும், ராஜாவாகிய உமக்கு முன்பாகவும் குற்றமற்றவனாகக் காணப்பட்டதால், தேவன் தம் தூதனை அனுப்பி சிங்கங்களின் வாயை கட்டிப்போட்டார்'' என்றான். இராஜா மிகவும் சந்தோஷப்பட்டு அவனை சிங்கக்கெபியிலிருந்து வெளியே கொண்டு வந்தான். அவன்மேல் குற்றம் சாட்டின மனுஷரையோ குடும்பமாக அதே சிங்கக்கெபியிலே போட்டான். சிங்கங்கள் அவர்கள் மேல் பாய்ந்து அவர்களை நொறுக்கிப்போட்டது.

ஆம் பிரியமானவர்களே, கிறிஸ்துவுக்கென்று நாம் பக்தி வைராக்கியத்துடன் வாழும்பொழுது, அவரே நம்மை ''வெளிச்சத்தின் பிள்ளைகளாக'' முழுவதுமாக மாற்றியமைக்கிறார். அதைத் தொடர்ந்து அவரே தமது ஆவியினால் நம்மை நிறைத்து, கர்த்தருக்கென்று கனிதரும் தெய்வீக வாழ்வை நமக்கு அருளி, பரிசுத்த ஆவியானவரின் நிறைவின் மூலம் நம்மை பிரகாசிக்க செய்கிறார். மேலும், அவரே தமது தெய்வீக மகிமையினாலும் நம்மை நிரப்பி, ''மகிமையின்மேல் மகிமையடைந்த மறுரூப வாழ்வையும்'' நமக்கு அருளுகிறார். இந்தவிதமாக, நாம் இருளில் வாழ்கிறவர்களாயிராமல், கர்த்தருடைய நாம மகிமைக்கென்று பிரகாசிக்கும் நட்சத்திரங்களாக எழும்பிப் பிரகாசிக்க தேவன் தாமே நம் ஒவ்வொருவருக்கும் அருள்புரிவாராக!

# இன்றைய இறை தியானம்

## மார்ச் – 2026



**1** **ஏசாயா 65:21 - வீடுகளைக் கட்டி குடியிருப்பீர்கள்**
**தியானத்திற்கு:** 2 சாமு. 5:11; 1 இராஜா. 11:38; எரே. 29:5

**2** **யோசுவா 1:6 - திடமனதாயிருங்கள்**
**தியானத்திற்கு:** உபா. 31:6; சங். 31:24; அப். 27:22-25

**3** **யோவான் 14:18 - திக்கற்றவர்களை கைவிடாத தேவன்**
**தியானத்திற்கு:** சங். 10:14,18; 68:5; எரே. 49:11; ஓசியா 14:3

**4** **எஸ்றா 7:28 - கர்த்தருடைய கரம்**
**தியானத்திற்கு:** 1 நாளா. 4:10; எஸ்றா 7:6; நெகே. 2:18

**5** **சங்கீதம் 1:3 - நீங்கள் செய்வது வாய்க்கும்**
**தியானத்திற்கு:** உபா. 29:9; 2 நாளா. 26:5; சங். 37:5

**6** **சங்கீதம் 119:105 - பாதைக்கு வெளிச்சம்**
**தியானத்திற்கு:** யாத். 13:21,22; நெகே. 9:12,19; ஏசாயா 42:16

**7** **உபாகமம் 33:29 - நீங்கள் பாக்கியவான்கள்**
**தியானத்திற்கு:** நீதி. 8:34; ஏசாயா 30:18; மத். 5:8; யோவான் 10:27

**8** **எரேமியா 29:13 - தேவனை தேடும்போது காண்பீர்கள்**
**தியானத்திற்கு:** உபா. 4:29; நீதி. 8:17; ஏசாயா 55:6

**9** **யோவான் 20:29 - விசுவாசிக்கிறவன் பாக்கியவான்**
**தியானத்திற்கு:** தானி. 6:23; மத். 8:13; மாற்கு 9:23,24

**10** **1 சாமுவேல் 2:30 - கர்த்தர் உங்களை கனம்பண்ணுவார்**
**தியானத்திற்கு:** 1 நாளா. 29:12; ஏசாயா 43:4; யோவான் 12:26

**11** **ஏசாயா 57:18 - கர்த்தர் நம்மை நடத்துகிறவர்**
**தியானத்திற்கு:** சங். 48:14; ஏசாயா 48:17; யோவான் 16:13

**12** **யோபு 5:9 - அதிசயங்களை செய்கிற தேவன்**
**தியானத்திற்கு:** யாத். 34:10; சங். 72:18; 86:10; மீகா 7:15

**13** **எரேமியா 15:20 - அரணான வெண்கலம்**
**தியானத்திற்கு:** சங்கீதம் 18:34; 107:15; வெளி. 1:15; 2:18

**14** **2 சாமுவேல் 7:9 - சத்துருக்களை நிர்மூலமாக்குவார்**
**தியானத்திற்கு:** லேவி. 26:8; உபா. 28:7; சங். 68:1

**15** **ஆதியாகமம் 15:1 - கர்த்தர் நமக்கு கேடகமானவர்**
**தியானத்திற்கு:** 2 சாமு. 22:31; சங். 28:7; நீதி. 2:7

**16** **யாத்திராகமம் 6:7 - கர்த்தர் நம் தேவனாயிருக்கிறார்**
**தியானத்திற்கு:** லேவி. 26:12; எரே. 11:3; 2 கொரி. 6:16

**17** **சங்கீதம் 4:8 - கர்த்தர் ஒருவரே**
**தியானத்திற்கு:** உபா. 6:4; ஏசாயா 37:20; மாற்கு 12:29

**18** **எபேசியர் 2:22 - நீங்கள் தேவனுடைய வாசஸ்தலம்**
**தியானத்திற்கு:** யாத். 25:8; லேவி. 26:11; வெளி. 21:3

**19** **யோபு 8:21 - தேவன் உங்களை நகைக்கப்பண்ணுவார்**
**தியானத்திற்கு:** ஆதி. 21:6; சங். 126:2; லூக்கா 6:21

**20** **மத்தேயு 7:7 - கேளுங்கள் கொடுக்கப்படும்**
**தியானத்திற்கு:** மத். 21:22; மாற்கு 11:24; யோவான் 14:13,14

**21** **லேவியராகமம் 20:26 - நீங்கள் கர்த்தருடையவர்கள்**
**தியானத்திற்கு:** உபா. 7:6; 14:2; சங். 33:12; ஏசாயா 43:1

**22** **யோவான் 16:24 - நிறைவான சந்தோஷம்**
**தியானத்திற்கு:** நெகே. 12:43; சங். 51:12; பிலி. 4:4

**23** **பிலிப்பியர் 4:19 - குறைவுகள் நிறைவாகும்**
**தியானத்திற்கு:** உபா. 2:7; ரூத் 2:12; யோபு 5:24

**24** **ஓசியா 14:4 - கர்த்தர் உங்களை குணமாக்குவார்**
**தியானத்திற்கு:** யாத். 23:25; ஏசாயா 53:1-5; மத். 9:35

**25** **ஓசியா 8:1 - எக்காளம்**
**தியானத்திற்கு:** நெகே. 4:20; யோவேல் 2:1; 1 கொரி. 15:51

**26** **எரேமியா 32:41 - நன்மை செய்யுங்கள்**
**தியானத்திற்கு:** 2 நாளா. 31:20; மத். 5:44; 1 தெச. 5:15

**27** **யோபு 24:22 - கர்த்தர் உன்னை பெலப்படுத்துவார்**
**தியானத்திற்கு:** சங். 18:1; பிலி. 4:13; 2 தீமோ. 4:17

**28** **உபாகமம் 15:10 - உங்கள் பிரயாசங்கள் ஆசீர்வதிக்கப்படும்**
**தியானத்திற்கு:** உபா. 14:29; சங். 128:1,2; 1 கொரி. 15:58

**29** **யோவான் 12:14 - பயப்படாதிருங்கள்**
**தியானத்திற்கு:** ஆதி. 15:1; யாத். 14:13; மத். 14:22-27

**30** **நீதிமொழிகள் 18:10 - பலத்த துருகம்**
**தியானத்திற்கு:** 2 சாமு. 22:3; சங். 18:2; 61:3; எரே. 6:27

**31** **சங்கீதம் 18:19 - விசாலமான இடம்**
**தியானத்திற்கு:** 2 சாமு. 22:20; சங். 118:5; ஆமோஸ் 9:6




இன்றைய ஆசீர்வாதத்திற்காக Dr. பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர் இந்த சத்தியத்தை விளக்கி ஜெபிப்பதைக் காணுங்கள்

இணையதளம்: www.jesuscalls.org/ta/dpv
ஃபேஸ்புக்: Jesus Calls Tamil
யூடியூப்: JesusCalls சப்ஸ்கிரைப் செய்திடுங்கள்
ஃபேமிலி சேனல் மொபைல் செயலி
ஃபேமிலி சேனல் இணையதளம் www.familychannel.org

SEESHA

LET'S GIVE LIFE

# பெண்களும் பொருளாதார விடுதலையும்










இந்தியாவில் நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் பொருளாதார விடுதலையைப் பெற போராடுகிறார்கள். கல்வி, திறன், அறிவு போன்றவற்றிலுள்ள குறைபாடுகள் பொருளாதார தன்னிறைவை அடையவிடாமல் அவர்களைத் தடுக்கிறது.

பல ஆண்டுகளாக சீஷா, நலிவுற்ற நூற்றுக்கணக்கான பெண்களுக்கு சந்தை தொடர்பான திறன் பயிற்சிகள், சுயவேலைவாய்ப்பு மற்றும் பணியமர்த்தப்பட உதவி போன்ற சேவைகளை செய்து வருகிறது. இந்த முயற்சிகளின் மூலம் அவர்கள் சந்தையில் பழக்கம் மற்றும் சுய உதவிக்குழுக்களின் கடனுதவி, வறுமையை எதிர்கொள்ள உதவும்படி புத்தாக்க தொழில்களுக்கு குறுபொருளாதார கடன் போன்றவற்றை பெறுவதற்கு வாய்ப்பு அதிகம் பெறுகின்றனர்.

2025ம் ஆண்டு நலிவுற்ற 750 பெண்களுக்கு தையல் பயிற்சி, ஆரி வேலைப்பாடு, அழகுக்கலை பயிற்சி, சணல் பொருட்கள் உற்பத்தி மற்றும் டிஜிட்டல் அறிவு திறன் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. தொழில் செய்யும் ஆர்வமுள்ளவர்களுக்கு சுழற்சி முறை கடனுதவியாக முதலீட்டு தொகை அளிக்கப்படுகிறது. சமீபத்தில் 61 பெண்கள் சிறுதொழிலுக்கான முதலீட்டு தொகையை பெற்றுக்கொண்டனர். விதவைகள், கைவிடப்பட்ட பெண்கள், மாற்றுத் திறனாளிகளான பெண்கள் போன்றவர்கள் தையல் இயந்திரங்கள், எரிவாயுவினால் இயங்கும் இஸ்திரி பெட்டிகள் மற்றும் தள்ளுவண்டிகளை வாழ்வாதார உதவியாக பெற்றுக்கொண்டனர்.



## வண்ணமயமான எதிர்காலம்

என் அம்மா புற்றுநோயால் மறைந்தார்கள். அவர்கள் மறைவுக்குப்பின் நான் மனமுடைந்து, பொருளாதார ரீதியாக பாதுகாப்பில்லாததுபோல் உணர்ந்தேன். சீஷாவின் ஆறு மாத இலவச அழகுக் கலை பயிற்சி எனக்கு புதிய நம்பிக்கையைக் கொடுத்துள்ளது. பயிற்சிக்கு பிறகு அனுபவம் பெற்று தற்போது 'Color Me Crazy' என்ற அழகு நிலையத்தில் மாதம் ரூ.10,000/- ஊதியத்தில் பணியாற்றி வருகிறேன். நான் தைரியமாக நிற்பதற்கு உதவி செய்த சீஷாவுக்கு நன்றி.

- **சங்கீதா இந்த்வார்**, ராஞ்சி, ஜார்க்கண்ட்.

**சீஷா அளிக்கும் இலவச அழகுக் கலை பயிற்சி சங்கீதாவின் வாழ்க்கையில் காணப்பட்ட பயத்தை நீக்கி நம்பிக்கையை அளித்துள்ளது. நீங்கள் உதாரத்துவமாய் அளிக்கும் நன்கொடை சங்கீதாவைப்போல அநேக பெண்களை மேம்படுத்த எங்களுக்கு உதவும்.**

நிதியாண்டு முடிவை நெருங்கியிருக்கும் இவ்வேளையில், சீஷாவுக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு வருமான வரி விதிகள் 80G என்ற பிரிவின்படி விலக்கு உண்டு. மார்ச் 31ம் தேதிக்கு முன்பாக நன்கொடை செலுத்தி, நீங்கள் செலுத்த வேண்டிய வரிகளை சேமித்திடுங்கள்.

- **நலிவுற்ற பெண்ணுக்கு வழங்கப்படும் திறன் பயிற்சியை தாங்குவதற்கு மாதம் ரூ.2,000/-**
- **நலிவுற்ற 10 பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் / தள்ளுவண்டிகள் வழங்க ரூ.1,50,000/-**

TAX-EXEMPTED

DONATE TO SEESHA

UPI ID : 9384015155@okbizaxis

044 66660000

+91 9300 600 600

www.seesha.org

info@seesha.org

* When you Donate send the Details to +91 9300 600 600

SEESHA house No.37, Gandhi Road, Tambaram (West), Chennai - 600045


## இன்னொரு வீடு



சீஷா முதியோர் இல்லம், கோயம்புத்தூர் காருண்யா நகரில் சிறுவாணி அருவியின் அடியில் அழகிய, அமைதியான இடத்தில் அமைந்துள்ளது. இங்கு அன்றாட வேலைக்கு உதவிகள், சத்துள்ள உணவு, முதியவர்களுக்கு முதுமைக்கான பராமரிப்பு உள்ளிட்ட சேவைகள் நியாயமான கட்டணத்தில் கிடைக்கிறது. +91-9500127275 என்ற எண்ணில் தொடர்புகொண்டு மேலும் விவரங்களை அறிந்துகொள்ளுங்கள்.



Printed by G.L.B.Ernest and Published by G.L.B.Ernest on behalf of Jesus Calls and Printed at Rasi Graphics Private Limited, DP 69-71-A, Sidco Industrial Estate, Thirumazhisai, Poonamallee Taluk, Thiruvallur District. and published at 16, Dr. D.G.S. Dhinakaran Salai, Chennai - 28, Editor: G.L.B.Ernest


Karunya
DEEMED UNIVERSITY
SOLVING HUMAN PROBLEMS
NAAC Accredited A++
CATEGORY 1 Institution
A++ Grade
Accreditation
ACCA
NBA
THE World University Rankings 2025 Asia 401 - 500 Band
UNIVERSITY RANKINGS
I-GAUGE
ADMISSIONS OPEN 2026
Dreaming of Going abroad while Studying?
Study at Karunya, Work Across the World
Turn your global dreams into reality at Karunya University! Experience International Internships, Semester Abroad Programs, and Global Industry Exposure - gain practical skills, earn while you learn, and build a career without borders!
₹ 31 Lakhs (PA) (€ 28896)
Internship Offer from a Top German Company
Maria Milan Elizabeth
B.Sc. (Hons.) Agriculture
Karunya Students Pursue Semester Abroad Program at WOOSONG UNIVERSITY South Korea
Karunya bags CAD
₹ 5.5 Lakhs ($ 6000) per semester (6 months)
per internship unit
Cape Breton University from Canada
Badi Venkata Prasanna
(B.Tech AI & Data Science)
Akash Keshavamurthy
(B.Tech CSE - AI & ML)
Devi Priya D.
II M. Tech (IWRM)
Water Institute
Vaishnavi N.
II M. Tech (IWRM)
Water Institute
Sathish Kumar R.
II M. Tech (FPE)
Food Processing Technology
Programs Offered : ENGINEERING | AGRICULTURE | MANAGEMENT | ARTIFICIAL INTELLIGENCE | COMMERCE
HEALTH SCIENCES | DIGITAL SCIENCES | PHYSICAL SCIENCES | MEDIA | Online B.Com. / MBA
Karunya Institute of Technology and Sciences,
Karunya Nagar, Siruvani Main Road, Coimbatore - 641 114. Tamil Nadu, India.
E-mail: admissions@karunya.edu • Website: www.karunya.edu
Toll Free: 1800 42 54 300, 1800 88 99 888
APPLY NOW!
Scan QR Code to Start the Admission Process

REGISTERED NEWSPAPER RNI No.TNTAM/2003/10418

